

சங்கீத
ஜூன்– 2025
ஸரிகமபதநி
இசை – நாட்டிய மாத இதழ்
ரூ.30/-
மலர் – 29 – இதழ் – 8

With best compliments



SRI. V.NARAYANA IYER MEMORIAL TRUST (REGD.)

NARAYANA VISHWANATH

Chairman

'Gitalaya' AD-48, AD-Block,
1st Street, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26212454 / 26214524
E-mail : nvishwat@gmail.com

# ஸரிகமபதநி

இசை – நாட்டிய மாத இதழ்

மலர் - 29 இதழ் - 8

தலைமைப் புரவலர்
பத்மஸ்ரீ. டாக்டர்.
**நல்லி குப்புசாமி செட்டியார்**

முதன்மை ஆசிரியர்
**நாராயணவிஸ்வநாத்** (RITES)

ஆசிரியர்
கலைமாமணி **ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்**

துணை ஆசிரியர்கள்
**சங்கர் வெங்கட்ராமன்**
**சிம்மம்குமார்**
**ஏவி. ஆர். வர்மா**

வடிவமைப்பு
**சி.ஜி.சுரேஷ்**

அச்சிடுபவர்
**டி.வேல்முருகன்,**
நியூ சித்ரா பிரஸ்
32, ஜீவரத்தினம் சாலை,
சென்னை-600081.

நிர்வாக அலுவலகம்
AD-48, முதல் தெரு, அண்ணாநகர்,
சென்னை - 600040.

அஞ்சல் முகவரி
**SARIGAMAPADANI**
POST BOX NO : 6050
ASHOK NAGAR, CHENNAI - 600083.

ஸரிகமபதநி பவுண்டேஷனுக்காக வெளியிடுபவர்
**இராம. பாஸ்கர்**

**Contact : 86670 03627 (MSG)**
**Web: www.sarigamapadani.in**
**E-mail -**
**sangeethasarigamapadani@gmail.com**

**Our Sponsors**
**Nalli Chinnasamy Chetty**
Chennai - 600 017.


# ஸரிகமபதநி விருதுகளுக்கு பரிந்துரைப்பீர்...



**ஸ**ரிகமபதநி இசை - நாட்டிய மாத இதழின் சார்பில் ஆண்டு தோறும், கலையுலகில் முதல்நிலைக் கலைஞர்களாகக் கூடிய முகாந்திரம் பிரதிபலிக்கும் இளம் கலைஞர்களை தேர்வு செய்து பாட்டுக்கு “நாதஸ்ரீ' நாட்டியத்திற்கு 'நிருத்யஸ்ரீ' கலைகளின் எழுத்திற்கு 'வித்யாஸ்ரீ' என மூன்று பெருமைமிகு விருதுகளை வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறோம்.

இவர்கள் உலகளாவிய ஸரிகமபதநியின் வாசகர்கள் மூலமே தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பது இவ் விருதுகளுக்கான மற்றுமொரு சிறப்பு. ஸரிகமபதநியின் மேற்படி விருதுகளுக்கு கலையுலகில் பெரு மதிப்பு உண்டு என்பது அனைவரும் அறிந்ததே.

2025-ம் ஆண்டிற்கான தங்களின் பரிந்துரைகளை எமக்கு அனுப்பலாம்.

**- முதன் நிலை ஆசிரியர்**

# கீர்த்திமிக்க மும்மூர்த்திகள்...



எத்தனையோ நூற்றாண்டுகள் உருண்டோடி இருக்கின்றன. கால வெள்ளத்தில் அவை கவனத்தைக் கடந்து கரைந்தும் போய் இருக்கின்றன. ஆனால், இவற்றுள் இசை உலகில் 18ஆம் நூற்றாண்டு மட்டுமே தனித் தன்மையுடன் இன்றளவும் போற்றிப் பேசப்பட்டு வருகின்றது.

அதற்குக் காரணம் இல்லாமலில்லை. மேற்கத்திய இசையுலகில் அழியாப் புகழ்பெற்ற பீத்தோவன், மொசார்ட், மெண்டெல்சன் மற்றும் சோபின் போன்ற இசை மேதைகள் தோன்றியது இக் காலகட்டத்தில்தான். இது ஒருபுறம் இசைப்புயலை உருவாக்கிக் கொண்டிருக்க, அதே சமயம் பூமிப்பந்தின் கிழக்குப் பகுதியில், அதிலும் குறிப்பாக தென்னிந்தியாவில் கர்நாடக இசையுலகின் மும்மூர்த்திகள் உதயமானார்கள்.

ஸ்ரீ சியாமா சாஸ்திரி (1763-1827), ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் (1767 - 1847) மற்றும் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் (1775 - 1835) ஆகியோர் துருவ நட்சத்திரங்களாய், சாகா வரம் பெற்ற கீர்த்திமிக்க சிரஞ்சீவிகளாய் ஜொலிக்கலானார்கள்.

இன்னும் சொல்லப்போனால் 1750 முதல் 1850 வரையிலான ஒரு நூற்றாண்டு காலம் உலகம் முழுவதுமே இசை வெள்ளத்தில் தோய்ந்து மூழ்கி முத்தெடுத்துக் கொண்டிருந்தது என ஐயமின்றி அறுதியிட்டுக் கூறலாம்.

தென்னிந்திய இசைப் புத்தகத்தின் முதல் அத்தியாயத்தை இம் மும்மூர்த்திகளே எழுதினர். அது மட்டுமல்ல; “இவர்களுக்குப் பிறகு இன்று வரை அப்படி எவரும் பிறக்கவில்லை என்ற காரணத்தால் இசைப் புத்தகத்தின் கடைசிப் பக்கங்களையும் இவர்களே எழுதினர்” எனக் கூறலாம் தானே?

சியாமா சாஸ்திரி, தியாகராஜர் மற்றும் முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஆகிய மூவருமே சொல்லி வைத்தார்போல் அன்றைய தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூரில் பிறந்தவர்கள். (சிலர், தியாகராஜர் திருவையாற்றில்தான் பிறந்தார் என்றும் கூறுகின்றனர். ஒருவேளை இதனால்தானோ என்னவோ மற்ற இருவரைப் போல் தான் பிறந்த “திருவாரூர்” குறித்து தியாகராஜர் தனது கிருதிகள் எந்தவொன்றிலும் குறிப்பிடவில்லையோ?)


தமிழகத்தின் ‘நெற்களஞ்சியம்’ எனப் புகழப்பட்ட தஞ்சைத் தரணியானது ஒரு காலத்தில் இசைக் களஞ்சியமாகவும்

விளங்கி வந்தது. பதினான்காம் நூற்றாண்டிலேயே விஜயநகரப் பேரரசு தனது ராஜ்ஜியத்தை மட்டுமல்லாது கூடவே கலை நயத்தையும் விஸ்தீரணப் படுத்தியது. நாயக்க மன்னர்கள் கலை, இலக்கியம், கலாச்சாரம், இசை என பல்வேறு துறைகளையும் செழித்தோங்கி வளரச் செய்தனர்.


இவர்களைத் தொடர்ந்து பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் போது மராட்டிய மன்னர்களின் ஆட்சிக்காலம் தொடர, பாரம்பரியமிக்க இசைக் கலையானது மேலும் மெருகு சேர்க்கப்பட்டு ஜாஜ்வல்யமான பிரகாசத்துடன் ஜொலிக்கலாயிற்று.

கீதம், ஆலாபனம், பிரபந்தம் என உருவகப்படுத்திக் கொண்டு இசையானது மேன்மேலும் வளரலாயிற்று.யக்ஷகானம், வேங்கடமகி நெறிப்படுத்திய 72 மேளகர்த்தா ராகவடிவம் ஒரு புறமென்றால் மேற்கத்திய இசையின் மெல்லிய தாக்கம் வேறொரு புறமென இசையானது பல்வேறு பரிமாணங்களுடன் உச்சிக்கால பகலவனைப் போல் பிரகாசிக்கத் தொடங்கியது.

1763 -1787 வருடங்களின் இடையே மராட்டிய மன்னர் இரண்டாம் துளஜா அவர்களின் 24 ஆண்டு கால ஆட்சியில் தான் இசையின் தாக்கம் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியது. கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் தோன்றியது இக்காலகட்டத்தில்தான். இரண்டாம் துளஜா



பீத்தோவன்



மொசார்ட்

மன்னர் அவர்களின் அரசவையை அலங்கரித்த இசைவாணர்கள் பலர் உண்டு. அவர்களுள் பிரபல வைணீகரான ‘வீணை வித்வான் சொண்டி வெங்கடரமணய்யா, ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்குக் குருவாகும் வாய்ப்புப் பெற்றார்.

தியாகராஜரின் தந்தை ராமபிரும்மம் இவரது சபையில்தான் ராமாயண பாராயணத்தை அரங்கேற்றி பக்தி ரஸத்தை பரவவிட்டார். முத்துஸ்வாமி தீக்ஷிதரின் தந்தையரான ராமஸ்வாமி தீக்ஷிதர், பைரவி வர்ணமான ‘விரிபோணியை’ கவனம் செய்த பச்சிமீரியம் ஆதி அப்பைய்யர் (பின் நாட்களில் சியாமா சாஸ்திரியின் குருவாகும் அரிய பாக்கியத்தைப் பெற்றவர்) சியாமா சாஸ்திரியின் தந்தையும், பங்காரு காமாக்ஷியைப் பூஜித்து வந்தவருமான விஸ்வநாத சாஸ்திரி (சன்மானமாக ராஜாவிடமிருந்து பல ஏக்கர் நிலங்களைப் பெற்றவர்) போன்ற பலரும் அடக்கம்.

ஆண்டவனின் கருணை கடாஷம்தான் முக்கியப் பங்கு வகித்து இம் மூவரையும் “மும்மூர்த்திகள்” எனப் பெயரிட்டு அழைக்கும் படியான ஒரு மகோன்னத ஸ்தானத்திற்கு உயர்த்தியது என்றால் அது மிகையில்லை.

சியாமா சாஸ்திரியின் வாழ்க்கை சரிதத்தைப் புரட்டிப் பார்க்குங்கால் அப்படியொன்றும் பரம்பரை இசைக் கலைஞர்களாகத் தலைமுறை தலைமுறையாக வருபவர்களாகத்

தெரியவில்லை. சிறு வயதில் தன் தாய் மாமனிடத்தில் இசைப் பயிற்றி எடுத்துக்கொண்டதுடன் சியாமா சாஸ்திரியின் இசை வாழ்க்கையில் அப்படியொன்றும் அதிசயம் நிகழ்ந்துவிடவில்லை. ஆனால், அவரது 18-வது வயதில் ஸங்கீத ஸ்வாமி என்ற தெலுங்கு சந்நியாசியின் ஆளுமை இவரிடம் படர்ந்தபொழுதுதான் அந்த 'அற்புதம்' நிகழ்ந்தது.

இசையிலும், பரத சாஸ்திரத்திலும் அதீத ஞானம் கொண்டவரான ஸங்கீத ஸ்வாமி சாதுர்மாஸ்ய விரதம் அனுஷ்டிக்கும் பொருட்டு தஞ்சாவூரில் தங்கி இருந்தார். அவ்வமயம் பிக்ஷாவந்தனத்திற்கு ஸ்வாமியை விஸ்வநாத சாஸ்திரி தமது இல்லத்திற்கு அழைத்து இருந்தார். ஸ்வாமியும் பிரவேசித்த பொழுது 18 வயது சியாமா கிருஷ்ணனைப் பார்த்த மாத்திரத்தில் 'இசைத் துறையில் அமோகமான கீர்த்தியுடன் இவன் விளங்குவான்' என தீர்மானித்தார்.

சியாமா கிருஷ்ணனின் ஒளி (ஒலி) மயமான எதிர்காலத்தை தன் நுண்ணறிவால் உணர்ந்து உடனடியாக அவனுக்கு ராக - தாள - ஸ்வர ஞானத்தைத் தாமே புகட்டலானார். சாதுர் மாஸ்ய விரதம் முடிந்த அந்த நான்காவது மாதத்தோடு இந்த குறுகிய கால இசைப் பயிற்சி முடிந்தாலும் சில மந்திரோபதேசங்களையும், ஆசிகளையும் வழங்கி பச்சிமீரியம் ஆதியப்பய்யாவிடம் 'சிரவணம்' மூலம் இசைப் பயிற்சி மேற்கொள்ளும்படி ஆலோசனையையும் வழங்கினார்.

இதே போல், தியாகராஜரின் வாழ்க்கையில் ராமகிருஷ்ணா நந்தா என்ற துறவியின் காணா கடாக்ஷம் பட்டபோது தியாகராஜருக்கு 18 வயதுதான். தியாகராஜரை 96 கோடி ராம நாமாக்களை ஜபிக்கச் சொன்னவர் இவர்தான். இதனை கடவுளின் ஆக்ஞையாகவே பாவித்து, அதனை சிரமேற்கொண்டு தொடர்ந்து 21 ஆண்டுகள் இடைவிடாமல் 'ராம' நாமாவை உச்சாடனை செய்து அந்த ராமபிரானையே பிரத்யட்சமாக தரிசிக்கும் பாக்யத்தைப் பெற்றார் தியாகராஜர்.

நாரத முனிவரே தியாகராஜரை ஆசிர்வதித்து (சந்நியாசி வேடத்தில்) 'ஸ்வரார்ணவம்' என்ற நூலைக் கொடுத்த பின்னர் தான் க்ருதிகளை கவனம் செய்யும் அசாத்திய திறமை தியாகராஜருக்கே வந்தது என்று கூறுவோருமுண்டு. (சங்கராபரண ராகத்தில் ஸ்ரீ தியாகராஜர் இயற்றிய 'ஸ்வரராக சுதாரஸ' என்ற கிருதியே இதற்கு ஆதாரம்) டாக்டர். வி.ராகவன் அவர்களின் கூற்றின்படி ஸம்ஸ்கிருத ஸங்கீத இலக்கியத்தில் 'ஸ்வர ராக சுதாரஸ' எனும் நூலின் ஒரு அங்கம் தான் இந்த ஸ்வரார்ணவம். இதைத்தான் தியாகராஜர் பின்பற்றி வந்தார். (வேங்கடமகியின் சதுர்தண்டிப் பிரகாசிகைக்குப் பதிலாக) என்றும் கூறுகின்றனர்.

இவர்கள், இருவருக்கும் மாறாக முத்துஸ்வாமி தீக்ஷிதரோ நல்ல இசைப் பாரம்பரியம் மிக்க குடும்பத்திலிருந்து வந்தவர். தந்தை ராமஸ்வாமி தீக்ஷிதர் இசையில் நல்ல பாண்டித்யம் உள்ளவர். இருந்தும் முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு 15 வயது இருந்த போது ராமஸ்வாமி தீக்ஷிதரின் ஆன்மீக குருவான சிதம்பர நாத யோகி என்ற பெரியவர் முத்துஸ்வாமி தீக்ஷிதரை தன்னுடன் வாரணாசிக்கு வரும்படி அழைத்தார்.

அங்கு அவர் ஸ்ரீ வித்யா மந்திரோபதேசம் மற்றும் பல மந்திர - தந்திர சாஸ்திரங்களையும் முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு உபதேசித்தார். ஐந்து வருட குருகுல வாஸத்திற்குப் பின் ஒருநாள் முத்துஸ்வாமி தீக்ஷிதரை கங்கை ஆற்றில் இறங்கச் சொன்னார். அவரும் அப்படியே செய்யவே அந்த புண்ணிய நதியிலிருந்து தேவநாகரி அட்சரத்தில் 'ராம' என்று பொறிக்கப் பெற்ற வீணை ஒன்று மிதந்து வந்து இவரது கைகளை வந்தடைந்தது! ஆக மும்மூர்த்திகள் அனைவருக்குமே பொதுவாக இறையருள் என்பது அதீதமாகவே அமைந்து அவர்களை வழிநடத்திச் சென்று மகோன்னதமான இடத்தினை அளித்து உள்ளது.

### சியாமா சாஸ்திரி (1763 - 1827)

இவர் முதன் முதலாக இயற்றிய க்ருதி ஆதி தாளத்தில் ஸாவேரி ராகத்தில் அமைந்த மூன்று சரணங்கள் கொண்ட “ஜனனி - நதஜன பரிபாலினி” என்ற கீர்த்தனை ஸம்ஸ்கிருதத்தில் அமைந்ததாகும். ‘சியாம கிருஷ்ண’ என்ற இவரது முத்திரை அப்பாடலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கல் நெஞ்சக்காரர்களையும் எளிதில் கரைய வைக்கக் கூடிய சக்தி வாய்ந்தவை சியாமா சாஸ்திரிகளின் கிருதிகள். காஞ்சி மாநகரில் கொலு வீற்றிருக்கும் அன்னை காமாட்சியே இவரது இஷ்ட தெய்வம் என்ற போதிலும் ப்ருஹன் நாயகி, ராஜராஜேஸ்வரி மற்றும் அகிலாண்டேஸ்வரி அம்பிகைகளின் பேரிலும் கிருதிகள் புனைந்துள்ளார்.

மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் மீது இவர் இயற்றிய நவரத்தின மாலிகை தொகுப்பே போதும்; இவரது பக்தியைப் பறைசாற்ற. ஆஹிரியில் ‘மாயம்மா’ மற்றும் ஆனந்த பைரவியில் ‘மரிவோரகதி’ போன்றவை இந்தத் தொகுப்பில் உள்ளவைதாம்.

ஆனந்த பைரவியில் அளப்பரிய ஆசை இவருக்கு உண்டு. அடுத்தபடி ஸாவேரி, கல்யாணி போன்ற ராகங்களுக்கு சிறப்பு அரியாசனம் உண்டு. சிந்தாமணி, கல்கட, மாஞ்சி, பரஸ் போன்ற ராகங்களிலும் க்ருதிகளை இயற்றி உள்ளார். ‘தேவி ப்ரோவ ஸமயமிதே’... “அதிவேகமே ஓச்சி” என்ற ஒரே பாடலைத் தான் சிந்தாமணியில் இயற்றி உள்ளார். ஸ்வர ஜதி, ஸ்வர சாகித்தியங்கள் புனைவதிலும் தனிச்சிறப்பு பெற்று இருந்தார்.

தெலுங்கு, தமிழ், ஸமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகளில் சுமார் 300 க்ருதிகள் இயற்றி உள்ளார். “ஸங்கீத ஸம்பிரதாய பிரதர்ஷிணி’ என்ற தொகுப்பிற்காக சுப்பராம தீக்ஷிதர் சுமார் நூறு சியாமா சாஸ்திரியின் க்ருதிகளை சேகரித்து வைத்து இருந்தார். அவர் இருக்கும்போதே அதனை நூலாக வெளியிட முடியாமல் போனாலும் அந்த தொகுப்பில் இருந்து (நூற்றுக்கும் குறைவான) சில கிருதிகள் இன்றளவும் பாடப்பட்டு வருகின்றன என்றால் அதன் பெருமை முழுவதும் சுப்பராம தீக்ஷிதர்வாளையே சாரும்.

திஸ்ர மத்யம் மற்றும் சதுஸ்ர அட தாளங்களில் தான வர்ணங்கள் இயற்றி உள்ளார். இருப்பினும் இவரது பைரவி - தோடி - யதுகுல காம்போஜி - ஸ்வர ஜதிகள் இசையுலகிற்குக் கிடைத்த ரத்தினங்கள் எனலாம். லய சம்பந்தமான கணக்கு வழக்குகளில் இவருக்கு அதீத ப்ரியமுண்டு.



சியாமா சாஸ்திரி

முதன் முதலாக விலோம காப்பு தாளத்தைப் பிரயோகித்தவர் சியாமா சாஸ்திரிதான். இவருக்கு ‘தாள பிரஸ்த்தார சியாமா சாஸ்திரி’ என்ற பட்டப் பெயரே உண்டு. சாஸ்திரிக்கு கணக்கு வழக்குகளில் இருந்த பாண்டித்தியம் நமக்கெல்லாம் அவரது கையெழுத்து மூலமாகவே தெரியும்படி ‘தாள பிரஸ்த்தார’ வரைபடம் உள்ளது.

பொப்பிலி கேசவய்யாவுடன் நடந்த போட்டியொன்றில் 79 அட்சரங்கள் கொண்ட சரபநந்தன தாளத்தில் முதன் முதலாக க்ருதியொன்றை கவனம் செய்து வெற்றியும் கண்டார். வெளி மாநிலத்து இசைக் கலைஞர்களுடன் போட்டியிட்டு (மும்மூர்த்திகளுள்) வெற்றி பெற்றவர் இவர் ஒருவரே.

இவரது சில கிருதிகளை

இரண்டு விதமான தாளங்களில் பாடலாம். அவை 'த்விதாளக் க்ருதிகள்' என அழைக்கப்படுகின்றன. இரண்டு வெவ்வேறு க்ருதிகளை (ஒரே ராகத்தில் அமைந்தவை) ஒரே மெட்டில் பாடலாம். அப்படி அவர் கவனம் செய்த க்ருதிகள் கல்யாணியில் "ஹிமாத்ரி கதே பாஹிமாம்", "பிராண வரலிசி" ஆகியவை உதாரணங்களாகும்.




சியாமா சாஸ்திரியின் க்ருதிகள் உள்ளங்கை நெல்லிக்கனி போன்றவை. சாமானியனுக்கும் புரியும்படி வாழைப் பழத்தை உரித்து கையில் கொடுப்பது போல இருப்பதால் அவை 'கதளி (கதளி - வாழை) பக்கா' என அழைக்கப்படுகின்றன.

1827-இல் இவர் பங்காரு காமாக்ஷியுடன் ஐக்கியமான பொழுது இவரது ஒரே மகன் சுப்பராய சாஸ்திரி தந்தையின் பணியை சிரமேற் கொண்டு அடுத்த தலைமுறைக்கு சியாமா சாஸ்திரியின் பெருமைகளை எடுத்துச் சென்றார். நூற்றுக்கணக்கான க்ருதிகளை புனைந்துள்ள சியாமா சாஸ்திரியார் விநாயகர் மீது ஒரு பாடல் கூட இயற்றியது இல்லை என்பது குறிப்பிட வேண்டிய விஷயமாகும்.

**தியாகராஜர் (1767 - 1847)**

தெலுங்கு ஸ்மார்த்த பிராமண வகுப்பைச் சேர்ந்த தியாகராஜரின் குடும்பம் தஞ்சாவூரில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே குடியமர்ந்து உள்ளது. தெலுங்கு மற்றும் ஸம்ஸ்கிருத பாஷைகளில் (த்வி பாஷா க்ருதி) நல்ல பாண்டித்யம் இருந்தபடியால், ஸங்கதிகள் நிறைந்த ராமபக்திக்குப் பிராதான்யம் கொடுக்கப்பட்ட பல நூறு கிருதிகளை கவனம் செய்துள்ளார்.

அத்யாத்ம இராமாயணம், அத்புத இராமாயணம், ஆனந்த இராமாயணம் மற்றும் வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்ட பல க்ருதிகளைப் புனைந்துள்ளார். இவரது க்ருதிகளுள் நமக்கு 650 மட்டுமே கிடைத்துள்ளன. மும்மூர்த்திகளுள் புலமை சற்று கூடுதலாகப் பெற்றவர். பாகவதம், பகவத்கீதை, உபநிஷதங்கள், இதிகாச புராணங்கள் போன்ற பலவற்றைப் படித்துத் தெளிந்து பல்வேறு கோணங்களில் பற்பல தினுசுகளான க்ருதிகளைப் புனைந்துள்ளார்.


நவ வித பக்தி நவரஸங்களையும் வெளிப்படுத்தும் கிருதிகள், தன் சொந்த வாழ்க்கை சரிதத்தை, அவர்பட்ட கஷ்ட நஷ்டங்களைக் கூடத் தெளிவாகச் சொல்லும் (கதை போல) கீர்த்தனைகள் என பல்வேறு வடிவங்களுண்டு.

பல்வேறு ராகங்களில் 3 காலங்களில் அமையப்பெற்ற பல க்ருதிகளைப் புனைந்துள்ளார். திராட்சைப் பழத்துக்கு ஒப்பிட்டுச் சொல்வர் இவரது கவனங்களை. மும்மூர்த்திகளுள் திவ்யநாம ஸங்கீர்த்தன க்ருதிகள் இயற்றியவர் இவர் ஒருவரே! பஜனை - ஹரிகதை போன்றவைகளில் இவருக்கு இருந்த அதீதமான ஈடுபாட்டின் விளைவாகப் பிறந்தவைதான் 'உத்ஸவ ஸம்பிரதாய கீர்த்தனைகள்' லால்குடி, ஸ்ரீரங்கம், கோவூர் மற்றும் திருவொற்றியூர் பஞ்சரத்தினங்கள் என்று நில்லாமல் நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீ ராகங்களில் அமைந்த கனராக பஞ்சரத்தினம் என்ற பொக்கிஷத்தையும் நமது ஸங்கீத உலகத்திற்காக அமைத்துக் கொடுத்துள்ளார்.

புரொபசர் சாம்பமூர்த்தி தனது குறிப்பில் ஸத்குரு ஸ்ரீ தியாகராஜர் 83 அபூர்வ ராகங்களில் க்ருதிகள் இயற்றியுள்ளதாகக் கூறுகிறார். குறிப்பாக நவரஸ கன்னட, ஜகன் மோகினி, ஜெயந்தஸ்ரீ போன்ற ராகங்களை வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டுக்

காட்டியவர் தியாகராஜர் தான்.

பாகவத மேளாக்கள் மற்றும் யக்ஷகானங்களின் தாக்கம் காரணமாய் 'MUSICAL OPERA' எனப்படும் 'கேய' நாடகங்களைப் புனைந்தார். பிரகலாத பக்தி விஜயம், நௌகா சரித்ரம் மற்றும் சீதாராம விஜயம் ஆகிய தெலுங்கு பாஷையில் அமையப் பெற்ற மூன்று நாடகங்கள் இதில் அடக்கம். ஸௌராஷ்டிரத்தில் பாடப்பட்டு வரும் "நீ நாம ரூபமுலகி நித்ய ஜெயமங்களம்... பவமான..." என்ற மங்களம் பாடும் பாடலை முதல் முறையாக அறிமுகப்படுத்தியவரும் இவரே.




"ஸ்வரராக ஸுதா ரஸ"வில் பல சரணங்கள், ஸ்ரீ ரஞ்சனியில் "ப்ரோ சேவா ரெவரே"வில் விதவிதமான நாட்டுகள், பத்யத்துக்கு முக்கியத்துவம் தரும் க்ருதிகள், வாழ்க்கைத் தத்துவத்தை விளக்கும் க்ருதிகள் (உ-ம் "நிதி சால சுகமா") ஆண்டவனை நேரில் கண்டபோது ஏற்படும் ஆனந்த மயமான நிலைக்குட்பட்ட க்ருதிகள் (உ-ம் "பால கனகமய").

தியாகராஜருக்கு இருந்த இறந்தவரை உயிர்த்தெழ வைக்கும் சக்தியை விளக்கும் க்ருதி (உ-ம் "நாஜீவா தார") இப்படி இன்னும் எத்தனையோ விஷயங்களை அவருடைய சரித்திரத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். இன்னும் சொல்லப்போனால் ஆராய்ச்சியாளர்களும், ஆய்வாளர்களும் தியாகராஜருக்கு முந்திய காலம் - தியாகராஜருக்குப் பிந்திய காலம் எனப் பிரித்துப் பார்த்துத்தான் தமது ஆராய்ச்சிகளைத் துவக்குகின்றனர்.

மற்ற இருவரைப் போலவே இவரும் க்ருஹஸ்தா ச்ரம தர்மத்தைக் கடைப்பிடித்து வந்தார். உஞ்சவிருந்தி செய்து தானியம் பெற்றுதான் அவர் ஜீவனம் நடத்தி வந்தார். கடைசி காலத்தில் சந்நியாசம் பெற்று சித்தியடைந்தார். இன்றளவும் இவரது சமாதியில் ஆராதனை விழா கோலாகலமாக நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே.

அதனாலேயே அவரை "தியாக ப்ரும்மம்", "ஸத்குரு தியாகப்ரம்மம்", "ஸ்வாமி" என்று பலரும் அழைத்து வருகின்றனர். அவரது க்ருதிகளைக் கூட "தியாகோப நிஷத்" என்றெல்லாம் கூறுவோருமுண்டு. பல சிஷ்யர்களையும் உருவாக்கி வழிவழியாய் இன்று பாரெங்கும் பரவிக் கிடக்கும்படி ஸ்ரீ தியாகராஜரின் க்ருதிகள் ஒரு மகோன்னதமான ஸ்தானத்தில் ஜொலிக்கிறதென்றால் அதற்கு அந்த ராமபிரானின் கருணா கடாக்ஷமே காரணம் என்று சொல்லவும் வேண்டுமோ?

## முத்துஸ்வாமி தீக்ஷிதர் (1775 - 1835)

ஸங்கீத மும்மூர்த்திகளுள் வயதிலும் மிக இளையவர். வாழ்ந்ததும் மிக குறுகிய காலமே. இவரது க்ருதிகள் ராகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து செதுக்கப்பட்ட அணிகலன்கள் போன்றவை. அந்த ராக ஸ்வரூபத்தை விச்வரூப தரிசனமாக்கிக் காட்டி விடுவார். (உ-ம்) "ஸ்ரீ ராஜகோபால" (ஸாவேரி) "பால கோபால" (பைரவி) ஆகிய க்ருதிகள் மிகவும் அபூர்வமான ராகங்களான மங்கள கைசிகி, குமுதக்ரியா, சாயா கௌளையிலும் ராகலக்ஷணங்கள் ஜொலித்திடும் வண்ணம் இயற்றியுள்ளார்.

தீக்ஷிதரின் பெரும்பாலான க்ருதிகள் ஸம்ஸ்கிருதத்தில் அமைந்துள்ளன. அதே சமயம் மணிப்ரவாள கிருதிகளும் உண்டு. இவர் ஒருவர் மட்டும்தான் தம் க்ருதிகளில் கோபுச்சா, ஸ்ரோதோவஹா போன்ற 'யதி'களை பிரயோகித்துள்ளார். மும்மூர்த்திகளுள் லட்சுமி, ஸரஸ்வதி பெயர்களில் க்ருதிகள் புனைந்தவர் இவர் மட்டுமே. சிட்டா ஸ்வரங்கள், சொற்கட்டுக்கள், ஸ்வராக்ஷரங்கள், கோர்வையான கார்வைகள், யதுகை -

மோனைகள், லயக் கோர்வைகள் என அனைத்து அம்சங்களும் நிரம்பப் பெற்றுள்ள க்ருதிகள் பல இவரது கைவண்ணத்தில் உருவானவைகள்தாம்.




மாயாமாளவ கௌளையில் "ஸ்ரீ நாதாதி குருகுஹா... ஜெயதி.. ஜெயதி" என்ற க்ருதியில் மூன்று காலப்ரமாணங்களையும் மாற்றி மாற்றி வேகத்தோடு பொழியவைத்து அதை மத்தியமகால ஸாகித்தியத் தில் சங்கமிக்க வைத்துள்ளார். இதை சாதாரணமாக 'லய ஞானம்' இல்லாதவர்களால் இயற்ற முடியாது.

இவரது குருநாதரின் பெயர் (சிதம்பர நாதயோகியின் இன்னொரு பெயர்) 'ஸ்ரீ நாதா'. இக்கிருதி குருநாதருக்கு காணிக்கை யாகக் கூட இருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. தீக்ஷிதர் க்ருதிகளில் எந்தவொரு பாடலிலும் இரண்டாவது சரணம் இருக்காது.

சில சமயங்களில் அனுபல்லவிக்குப் பதிலாக ஸமஷ்டி சரணத்தைக் கையாண் டுள்ளார். சுப்பராம தீக்ஷிதரின் "ஸங்கீத ஸம்பிரதாய பிரதர்ஷிணி"யில் (ஸ்ரீ ரஞ்சனி) வர்ணமான "சாமி நின்னே கோரி"யை சியாமா சாஸ்திரியும், முத்துஸ்வாமி தீக்ஷிதரும், தீக்ஷிதரின் சகோதரரான சின்னஸ்வாமி தீக்ஷிதரும் இணைந்து இயற்றியுள்ளதாக தகவல் உள்ளது. மும்மூர்த்திகளுள் மற்ற இருவருக்கும் இல்லாத, கிட்டாத சில தனிப்பெரும் பெருமைகள் தீக்ஷிதருக்கு கிட்டியது.

மேற்கத்திய இசையின் தாக்கத்தால் 'நோட்டு ஸ்வர' சாகித்யங்கள் தோன்றின. (உ-ம்) சக்தி சகித கணபதிம், ஷோடச கணபதி க்ருதிகள், விபக்தி க்ருதிகள், கமலாம்பா நவாவர்ண க்ருதிகள், பஞ்சபூத க்ருதிகள் மற்றும் பஞ்சலிங்கக் க்ருதிகள் போன்றவை இவரது படைப்புகளே.

"ஸ்ரீ விஸ்வநாதம்" என்ற ராக மாலிகையை 14 ராகங்களில் புனைந்துள்ளார். (சதுர்தச ராகமாலிகை என்று இதற்குப் பெயருண்டு) இவரது நவக்கிரஹ க்ருதிகள் சூளாதி சப்த தாளங்களில் கவனம் செய்யப்பட்டுள்ளன. ராகங்களின் பெயர்களை இவர் தம் கிருதிகளின் ஊடே புகுத்திவிடுவார். க்ஷேத்ரங்கள் பற்றிய க்ருதிகளில் விமானம், தீர்த்தம், ஸ்தல விருக்ஷம், அங்கு அருள் பாலிக்கும் ஈஸ்வரன், அம்பிகை உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் அழகுற விளக்குகிறார். க்ஷேத்திராடணம் செய்து பல கோயில்களின் வரலாற்றை பாடல் வடிவில் புனைந்துள்ளார்.

சியாமா சாஸ்திரியின் தூண்டுதலின் பேரில் தீக்ஷிதரும் ஸ்ரீ வித்யா உபாசகரானார். ஸ்ரீ சக்ர பூஜையைத் தம் சிரமேற்கொண்டு உபாசித்து, அப்யஸித்து வந்தார். ஜோதிஷம் மற்றும் "சாக்தம்" என்ற முறையின் அடிப்படையில் உருவானதுதான் இவரது நவாவர்ண கிருதிகளாகும்.

தஞ்சை நால்வர் இவரது சிஷ்யர்களே. இவர்களுள் பொன்னையா தமது குருநாதரான முத்துஸ்வாமி தீக்ஷிதரின் பேரிலேயே 9 க்ருதிகளை 'நவரத்தின மாலா' எனும் பெயரில் இயற்றியுள்ளார். குருபக்திக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு இது. 1835-ல் முத்துஸ்வாமி தீக்ஷிதர் காலமானபோது சுமார் 440 க்ருதிகளை நமக்காக விட்டுச் சென்றுள்ளார். "குருகுஹ" என்பது இவரது முத்திரை.

கூர்மாவதாரத்தில் கடலைக் கடைந்த போது அமுது கிடைத்தார் போல (1750 - 1850) காலகட்டத்தில் இசை மும்மூர்த்திகள் நமக்கு விட்டுச் சென்றுள்ள பொக்கிஷ மானது காலா காலத்திற்கும் அழிவில்லாமல் சிரஞ்ஜீவித்துவம் பெற்று ஜாஜ்வல்யமாய் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது. இருக்கும்.

**மூலம் – லக்ஷ்மி தேவநாத். தமிழில் – ஜெயஸ்ரீ**





# கலை வளர்க்க இடப்பெயர்ச்சி அவசியம்

நடப்பு சங்கீத சீசனில் சபாக்களுக்கு சென்று வந்த வகையில் ஏறக்குறைய பெரும்பாலான இடங்களில் சங்கீத நிகழ்வுகள் சம்பிரதாயமாகத்தான் நடந்தேறின. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் - கலைஞர்களும் தான் அரங்கில் இருந்தனர். ரசிகர்கள் என்கிற தரப்பு எங்கேயும் கண்ணில் படவில்லை. சில வருடங்களுக்கு முன்பு வரை தொலைக்காட்சி சீரியல்களை காரணம் சொல்லி வந்தோம். இப்போது அதற்கு அந்தளவு வரவேற்பு இல்லை. அதனால் தான் சின்ன பட்ஜெட் படங்கள் கூட நஷ்டம் இன்றி வசூல் பெறுகின்றன. அப்படி இருக்க ஏன் சாஸ்திரிய சங்கீத நிகழ்வுகளுக்கு மட்டும் இப்படியான துர்பாக்கிய நிலை.

முன்பெல்லாம் எங்கெங்கே யார் யார் நிகழ்ச்சி என்று தேடிப் பிடித்து சேகரித்து சென்று வர வேண்டி இருந்தது. சோஷியல் மீடியா மூலம் இப்போது நிமிடத்துக்கு நிமிடம் நினைவூட்டல்கள். வருண பகவானும் இந்த வருடம் கொஞ்சம் கருணை காட்டவே செய்தார். இருந்தும் ஏன் இந்த வெற்று சபாக்கள்... ‘கடை விரித்தேன் கொள்வாரில்லை’ என்பதாக...

இது ஏதோ இன்று நேற்று தொடங்கவில்லை. தற்போது முற்றிப் போய் இருக்கிறது அவ்வளவுதான். இனி சபாக்களால் கலைஞர்களை ஊக்குவிக்கவோ, உற்சாகப்படுத்தவோ முடியாது என்பது நிதர்சனம் ஆகிவிட்டது. முன்பு போல் ஆலயங்கள்தான் கலைகளின் புகழிடம் ஆக வேண்டும். ஒரு காலத்தில் கோவில்களில் முதியோர்களை மட்டுமே அதிகம் பார்க்க முடியும். இப்போது அப்படி இல்லை. ஆன்மிக ஈடுபாடு இளம் தலைமுறையிடம் அதிகம் தென்படுகிறது. எனவே, ‘இங்கு வா நான் தருகிறேன்’ என்று அழைக்காமல் அவர்கள் வருகிற இடத்திற்கு நாம் சென்று வழங்க வேண்டியதுதான்.

சிவராத்திரி தினங்களில் எல்லா ஆலயங்களிலும் விடிய விடிய நாட்டிய நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அவைகளை கொட்டும் பனியிலும் அமர்ந்து அனைத்துத் தரப்பு மக்களும் ரசிக்கின்றனர். இதில் ஈர்க்கப்படும் பெற்றோர்கள் குழந்தைகளை நாட்டிய வகுப்புகளில் சேர்ப்பதும் நடக்கத்தான் செய்கிறது.

இதுபோல் ஆலயங்களில் விசேஷ நாட்களில் மட்டுமின்றி வார விடுமுறை நாட்கள், பௌர்ணமி தினங்களில் நமது சாஸ்திரிய சங்கீத நிகழ்ச்சிகளை, நாட்டிய நிகழ்ச்சிகளை அறநிலையத்துறை ஒத்துழைப்போடு நடத்தினால் சங்கீத ஆர்வலர்களும் பெருகிட வாய்ப்பு ஏற்படும்.

– பொள்ளாச்சி ஈஸ்வரன்



# சிதம்பரம்

## தலமும் - பாடலும்



“**மி**ன்னும் புகழ் சேர்தில்லை” எனப் புகழ் பெற்ற தலம் சிதம்பரம். பஞ்சபூதத் தலங்களுள் ஆகாசமாய் இறைவன் விரவி நிற்கும் தலமிதில் ‘வெறுவெளி’ என்பதான சபையில் பிரபஞ்சத்தையே இயக்கி ஆட்சிபுரியும் அம்பலத்தவன் அருளுருவாய் விளங்கிடும் காட்சி பிறவி எடுத்த ஒவ்வொரு உயிரும் கண்டு உய்ய வேண்டியது.

“குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே!”

என்ற நாவரசர் மொழி நமக்கு ஏற்ற அருளுரையல்லவா? சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணம் பாட யானை மீது வந்து அநபாய சோழனால் சிறப்பிக்கப் பெற்று அரங்கேற்றம் கண்டபதி இது!



காரைக்காலம்மையார்

இத்தலத்தில் உறையும் இறைவன் பஞ்சாட்சரப் படிகளும், பசும்பொன் ஓடுகள் வேயப்பட்டுள்ள பொன்னம்பலத்தில் நடமிடுகிறான். அண்ட சராசரங்களை இயக்கும் அருள் நடனம் அது. நமது இருதய கமலத்துள் இறைவன் உயிராய், உயிர் துடிப்பாய் விளங்குகிறான் என்பதன் விளக்கமே நடராசப் பெருமான்.

ஒரு நிமிடத்திற்கு பதினைந்து முறை மூச்சுவிடும் நாம் ஒரு நாளைக்கு 21,600 முறை மூச்சு விடுகிறோம். உயிர் மூச்சு அவனே என்பதைக் குறிக்க எம்பெருமான் ஆடிடும் சிற்சபைக்கு வேயப்பட்டுள்ள பொன் ஓடுகளின் எண்ணிக்கையும் 21,600 ஆகவுள்ளது.

புலிக்கால் முனியான வியாக்ரபாதருக்கும், பதஞ்சலி முனிவருக்கும் தந்த வாக்கிற்காக ஈசன் தில்லை வனத்தில் ஆடிட உமையவள் கண்டு களித்ததாக தல வரலாறு கூறுகிறது. தலப்புகழ் விரிவினும் தலத்தைப் போற்றிடும் பாடல்களின் விரிவு கடலனையது.

தில்லையாடுவோனைத்

தேவார மூவரும் தேன் தமிழ்ப் பாடல்களால் பரவியுள்ளனர். சம்பந்தர் பாடலிலிருந்து ஒரு பதிகம். குறிஞ்சிப் பண்ணில் அமைந்தது.

"செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே"

திருத்தாண்டகமாகத் திருநாவுக்கரசரோ சிதம்பர நாதனைப் பற்றிப் பேசாத நாள் ஒவ்வொன்றும் வீண் என்பார்.

"அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அனுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத் திகழொளியைத்
தேவர்கள் தம்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைக்கட லெக்குல வரையைக் கடந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!"

சுந்தரர், சுந்தரத் தமிழில் நாம் செய்யும் பாவத்திற்கு எமதர்மராஜன் நம்மைச் செக்கிலிட்டுத் துன்புறுத்தாதபடி அருளும் ஈசனைப் பணி என்பார்.

மடித்தாடும் அடிமைக் கணன்றியே மனனே நீ வாழும் நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர் செக்கலிடும்போது தடுத்தாட்கொள்வான்
கருத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரியகலும் கரியபாம்பும்
பிடித்தாடி புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானைப் பொற்றாமன்றே"

திருமூலர், மணிவாசகர், காரைக்காலம்மையார் போன்ற அறவழி காட்டிய அருளாளர்கள் பலராலும் பாடப்பட்ட தலம் இது. பிற்காலத்தில் ஆனைதாண்டவபுரம் கோபால கிருஷ்ண பாரதியார் பாடிய "நந்தனார் கீர்த்தனை" எனும் நூலில் நடராசப் பெருமானைப் போற்றிப் பாடியுள்ள பாடல்கள் செஞ்சுவைத் தேனாகும்.


மாஞ்சி ராகத்திலமைந்த "வருகலாமோ", பெஹாக் ராகத்தில் "ஆடும் சிதம்பரமோ", தேவமனோகரியில் "ஆருக்குத்தான் தெரியும்" மற்றும் "மார்கழி மாதம்" "பித்தம் தெளிய மருந்து", "நாளைப் போகாமல் நான்", "சற்றே விலகியிரும்பிள்ளாய்", "சிவலோக நாதனை" ஆகிய பாடல்கள் என்றென்றும், எண்ணும் தோறும் இனிமை சேர்ப்பவை. கடந்த காலங்களில் பலவித்வான்கள் கச்சேரிகளில் பாடிப் பெருமை சேர்த்துக் கொண்ட பாடல்கள் இவை.



சேக்கிழார்



பதஞ்சலி முனிவர்



வியாக்ரபாதர்


## தமிழிசை தன்னிகரற்றது

உலக இசைகளிலேயே மிகச் செறிவான, ஆழமான 'இசையியல் அம்சம்' என்பது தமிழிசைக்கு மாத்திரமே உண்டு. ஆனால், துரதிருஷ்டவசமாக தமிழிசையின் வரலாற்றினை, இயல்பை, சிறப்பை விளக்க முனையும் பொழுது இத்தகு பெருமைகள் அவ்வளவாக இல்லாத கர்நாடக இசையின் பாங்கினையும் - வழி முறைகளையும் சொல்லி அதனடிப்படையிலேதான் புரிய வைக்க வேண்டி உள்ளது.

– ஈழத்து அறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி.



ஈசன் ஆடும் அழகினை "விரித்த செஞ்சடையாட வதன சந்திரன் ஆட" எனும் பழம் பாடலும் "திருவடி சரணம்" எனும் காம்போதி ராகப் பாடலும், முசிறி சுப்ரமணியய்யர் பாடிய இனிமை இன்றும் நம் காதுகளில் ஒலிக்கிறது என்றால் பாடப்பட்ட பொருள் பரமன் பற்றியது என்பதல்லாமல் வேறென்ன?




சபாநாயகர் மீது முத்துத்தாண்டவர், மாரிமுத்தாபிள்ளை ஆகியோர் பாடிய முத்தான பாடல்கள் இசை மேடைகள் மட்டுமின்றி நாட்டிய மேடைகளிலும் சிறப்புச் செய்கின்றன. நினைவு கோர நெஞ்சம் இனித்திடும் பாடல்கள் கோபால கிருஷ்ண பாரதியவர்களது 'நடனம் ஆடினார்' வசந்தாவில் ஒலிக்க வசமாகாத ரசிகர்கள் எவர்தானுண்டு?

முத்துத் தாண்டவரது "ஆடிக் கொண்டார்", "ஆரார் ஆசைப்படார்", "சந்திர குஞ்சித பாத நிலை", "தெருவில் வாரானோ", "தெண்டனிட்டேன் என்று" ஆகிய பாடல்களும் மாரிமுத்தா பிள்ளையவர்களது "ஒருக்கால் சிவ சிதம்பரம்" யதுகுல காம்போதியில் "காலைத் தூக்கி நின்றாடும்" "ஏதுக்கித்தனை மோடிதான்" ஆகிய பாடல்களும் என்னாளும் மறையாப் புகழ்பெற்றவை.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் சிதம்பரத்து ஈசனைப் பஞ்சலிங்கக் கீர்த்தனையாகக் கேதாரத்தில் "ஆனந்த நடன" எனப் பணிந்ததோடு "சிதம்பர நடராஜ" எனத் தனுகீர்த்தியிலும், "கனக சபாபதிம்" மாளவ ஸ்ரீயிலும், "சிவகாமிபதிம்", நாட்டக் குறிஞ்சியிலும் "சிதம்பர நடராஜம்" கேதாரத்திலும், "சிதம்ப பிரசேவரம்" துனிபின்ன ஸட்ஜத்திலும், "சிவகாமேச்வரீம்" - கல்யாணியிலும், சிதம்பரத்தில் கிடந்து அருளும் கோவிந்தராஜப் பெருமானை "கோவிந்தராஜனே" மேசபௌளியிலும் "கோவிந்தராஜம்" - முகாரியிலும், "கோவிந்தராஜாய" சுருட்டியிலும் அருளியுள்ளார்கள்.

அத்தன் ஆனந்தக் கூத்தன் - அன்னை சிவகாமி பணி முத்தன் - சுந்தரன் பாடிய பித்தன் - காலகாலனுக்கும் எத்தன் - நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனாம் - கனக சபாபதிக்கு நமஸ்காரம் செய்து அந்தச் சிவலோகநாதனை கண்டு சேவித்திடுவோம் வாரீர்.

– ரேவதி சங்கரன்



# ஆலய அமைப்பில் சோழ தேசம்

**சி**வன் கோயில்களில் கருவறை மண்டபத்தில் உள்ள லிங்கத்தை 'மகாலிங்கம்' என்கிறோம். மகாலிங்கத்திற்கு ஊருக்கு ஊர் தல புராணத்திற்கேற்ப கபாலீசுவரர், வன்மீகநாதர், மயூரநாதர் என்று பெயர்கள் மாறுபடும். ஆனால், ஒரு மகாலிங்கத்துக்கு மாத்திரம் தான் 'மகாலிங்கம்' என்றே பெயர். அந்த மகாலிங்கம் மத்தியார் ஜுனத்தில் இருக்கிறது.

மத்தியார் ஜுனம் என்பது திருவிடைமருதூர் (அர்ஜுனம் என்றால் மருது. வடக்கே கர்நூல் ஜில்லாவில் மல்லிகார்ஜுனம் (ஸ்ரீ சைலம்) தெற்கே திருநெல்வேலி ஜில்லாவில் புடார் ஜுனமும் இருக்கிறது) இங்குள்ள லிங்கத்தை மகாலிங்கம் என விசேஷமாக அழைக்கிறோம். காரணம், சோழ தேசமே ஒரு கோயிலாக அமைந்திருப்பதுதான். "வித்யா கௌடே, சிவ; சோழ" என்று சொல்வதுண்டு. தர்க்கம் முதலிய வித்தைகளுக்கு கௌட (வங்காளம்) தேசம் பிரசித்தம். சைவத்திற்கு சோழ தேசம் பிரசித்தம்.


சீர்காழி

சோழ தேசத்தில் சிவன் கோயில்கள் அதிகமாக இருப்பதோடல்லாமல் தேசமே ஒரு சிவன் கோயிலாக அமைந்து உள்ளது. பொதுவாக, சிவன் கோயில்களில் கன்னி மூலையில் கணபதியும், மேற்கில் சுப்ரமண்யமும், வடக்கில் சண்டேசுவரரும், தெற்கில் தக்ஷிணாமூர்த்தியும், அக்னி மூலையில் சோமாஸ் கந்தரும், ஈசானத்தில் நடராஜரும், பைரவரும் அமர்ந்து அருள்புரிவார்கள். பரிவார தேவதைகள் ஆலயத்தில் இந்தந்த இடத்தில் இருக்க வேண்டும் என ஆகம விதி சொல்கிறது.

இந்த ஆலய அமைப்பின் படி சோழ தேசத்தை ஆராய்ந்தால் திருவிடைமருதூரரை ஈசன் மகாலிங்கம் அமர்ந்துள்ள கர்ப்பகிரகமாக கணக்கில் கொள்ள வேண்டும். நந்திகேஸ்வரரும் இங்கேயே உள்ளார். இதற்கு நேர் மேற்கில் 10 மைல் தூரத்தில் சுப்ரமண்யர் அமர்ந்துள்ள சுவாமிமலை ஷேத்ரம். இதற்கு சிறிது தெற்கில் கன்னி மூலையில் பிரசித்திபெற்ற கணபதி வீற்றிருக்கும் திருவலஞ்சுழி தலம். பத்துமைல் தெற்கில் உள்ளது ஆலங்குடி. இது உலகப் புகழ் பெற்ற தக்ஷிணாமூர்த்தி இருப்பிடம். இதற்கு நேர் வடக்கில் உள்ளது திருஞ்சேய்ஞலூர். இது சண்டேசு வரர்க்கான தனி கோயில் உள்ள ஊர். திருவாரூரில் சோமாஸ்கந்தர், சீர்காழியில் (சட்டநாதர்) பைரவர், தில்லையில் நடராஜர் என சோழ தேசமே ஒரு சிவாலயமாக அருள்பாலிக்கிறது.

இதனால் தானோ என்னவோ நவக்கிரகங்கள் எனப்படும் மனிதகுலத்தை இயக்கும் ஒன்பது கோள்களுக்கான ஆலயங்களும் கூட இதே சோழ தேசத்திலேயே மையமாகி அமைந்துள்ளன போலும்.

- என்.எஸ்.சேஷாத்ரி





# ரசிகனாக்கும் பயிற்சி வகுப்புகள் ஏன் இல்லை?

“**எ**ந்தவொரு கலையாக இருந்தாலும் ஏழு வருடங்கள் தொடர்ந்து கற்று வந்தால் அதில் வல்லவனாகிவிடலாம்” என்று எனது தாயார் கூறுவார். தன்னுடைய சுய விருப்பத்திலோ, பெற்றோரின் நிர்பந்தத்தாலோ இளம் வயதிலேயே நுண்கலை ஒன்றைக் கற்று அதிலே பயிற்சியை விடாது செய்து வருவோமேயானால் அக்கலையில் நம் உழைப்பிற்கேற்ற உயரத்திற்கு வித்வானாகி விடுவது உறுதி.

வாய்ப்புக் கிடைத்தால் எல்லோருமே, கட்டாயம் ஒன்றோ இரண்டோ இசைக் கருவிகளை வாசிக்கக் கற்றுக் கொள்வது மிகவும் நல்லது. பாட்டுப்பாட அனைவராலும் முடியாது. ‘குரல் இல்லாதவனுக்கு விரல்’ என்பார்கள். இசைக் கருவிகளை இசைக்க ஆர்வம்போதும். பயிற்சி அதனை சிறப்பாக்கும்.

எங்கள் காலத்தில் குடும்பங்களில் 6 குழந்தைகள் என்பது சர்வசாதாரணம். (இப்போது நினைத்தால் ஆச்சர்யமாக உள்ளது) நான் என் இளம் வயதில் இசைக் கருவி வாசிக்க ஆசைப்பட்டேன். 60-களில் எல்லாம் மாதக் கட்டணம் ரூ.10/- தான். ஆனால், சொந்தமாக இசைக் கருவி இருப்பது அவசியம் என்றபோது அது நிராசையாகிப் போனது.

இப்போதெல்லாம் வீடுகளில் ஒரு குழந்தைதான். அதிகபட்சம் இரண்டு. பெற்றோர் இருவரும் சம்பாதிப்பதால் வசதிக்கு குறைவில்லை. அரை மணி நேர வகுப்பிற்கு இப்போது மாதக் கட்டணம் ரூ.500/-. கூட்டம் அலைமோதுகிறது. ஆன் லைன் மூலமும் கலை காக்கப்படுகிறது. இருந்தென்ன? குதிரையை குளத்திற்குத் தான் கூட்டிப்போக முடியும். தண்ணீரை அதுதானே குடித்தாக வேண்டும்.

இசைக் கருவிகள் வாசிக்கக் கற்பது என்பது வித்வானாகிட மட்டும் அல்ல. இசையினை ரசிக்கவே அடிப்படை அறிவு அவசியம். இசையை ரசிக்கச் சொல்லித் தருவதற்கு எந்த பயிற்சி வகுப்பும்

## சங்கீத 'மார்கம்'

இளம் சங்கீதக் கலைஞர் ஒருவர் வாய்ப்புக்காக ஒரு சபா காரியதரிசியை நேரில் சந்திக்கச் சென்றார். காரியதரிசியின் அலுவலக முகப்பினை அடைந்தார். அங்கே வரவேற்பாளர் என யாரும் இல்லை. ஆண் - பெண் என இரண்டு போர்டுகளும், அவற்றிற்கான தனித்தனி பாதைகளும் இருந்தன. வந்தவர் 'ஆண்' என்று போர்டு தொங்கியப் பாதையில் சென்றார்.

ஒரு இடத்தில் இரண்டு வழிகள் பிரிய, ஒன்றிலே 'பாட்டு' எனவும் மற்றொரு வழியிலே 'வாத்யம்' என வேறு இரண்டு போர்டுகள் தென்பட்டன. நம்மவர் 'பாட்டு' என அறிவிப்புப் பலகை காட்டிய வழியில் சென்றார்.

கொஞ்சதூரம் சென்றதும் 'ஸ்பான்சரை (கச்சேரிக்கு) தருபவர்', 'தர இயலாதவர்' என மற்றும் இரு போர்டுகள் தென்பட்டன. நம்மவர் 'இயலாதவர்கள்' பாதைக்குள் புகுந்தார்.

இரண்டு நிமிடம் கூட நடந்து இருக்கமாட்டார். எதிர்பட்ட கேட்டை திறந்து கொண்டு சென்றவருக்கு அதிர்ச்சி. இருக்காதா... பின்னே... கொல்லை புற வழியாக சபாவிற்கு வெளியே அல்லவா அவர் வந்து சேர்ந்து இருந்தார்.

**– ஆரூர் நந்து**

கிடையாது. வாத்யத்தை கற்க முயற்சிப்பதன் மூலம் அதன் அடிப்படை அம்சங்கள் இசையினை ரசிக்க ஆயத்தமாக்கிவிடும் என்பது தான். சமீபகாலமாக ஒவ்வொரு ஊர்களிலும் 'தனிமையாளர்களின்' எண்ணிக்கை அதிகரித்தபடி உள்ளது. கிராமப்புற நிலை சமாளிக்கக் கூடியது. நகர்ப்புற தனிமை பெரும் வேதனை.

வாழ்க்கைச் சூழலை எளிதாக கடத்த ஒரே குழந்தை வசதியாக இருப்பதனால் பல இளம் தம்பதிகள் இதனைப் பின்பற்றி; நடுத்தர வயதில் அக்குழந்தை வேலைவாய்ப்பு கருதி வெளிநாட்டிற்கோ, திருமணமாகி வெளி தேசங்களுக்கோ சென்று விடுகையில் தம்பதிகள் வாழ்க்கையின் வெறுமையில் வகையாகச் சிக்கிக்கொள்கின்றனர். இதிலும், இருவரில் ஒருவர் மறைந்தால் அந்த ஒருவரின் நிலை பரிதாபத்திற்கு உரியதாக உள்ளது. சென்னைப் போன்ற பெரு நகரங்களில் ஒவ்வொரு பிளாட்டிலும் இப்படியான தனிமையாளர்கள் நான்கைந்து பேராவது உள்ளனர்.

ஆன்மிகமும் - இசையும் தான் இவர்களின் ஒற்றைத் துணைவன். தேவைக்கதிகமான பணம் இருக்கிறது. குறைந்தபட்ச மன நிம்மதி கூட இவர்களிடம் இருப்பதில்லை.

எனவே, உறவுகளின் நெருக்கம் இல்லாதபோது அவ் வெற்றிடத்தை குறைக்கும் உற்ற தோழனாக - தோழியாக நாம் கற்றுக் கொண்ட வாத்யம் உடன் நிற்கும். நமது மன அமைதிக்காக வாசித்து மகிழ்வது மட்டுமின்றி அடுத்த தலைமுறைக்கு அதனை கற்றுக் கொடுப்பதன் மூலம் அளவிடற்கரிய மன நிம்மதி நமக்கும் வாய்க்கும்.

இசையும் ஓர் இனிய உறவுதான். அதைச் சொன்னால் புரியாது. அனுபவித்தால் மட்டுமே விளங்கிடும்.

– கவிஞர் கலைவாணி

# ‘பத்மபூஷண்’ நல்லி குப்புசாமி செட்டியார்



‘நல்லி செட்டியார்’ என்று தொழில் வர்த்தக வட்டாரங்களிலும், பொது வாழ்வு அமைப்புகளிலும் அறிமுகமாகியுள்ள டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் காஞ்சீபுரத்தில் நெசவாளர் குடும்பத்தில் 1940-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் தேதி பிறந்தவர்.

உத்தரவாதமுள்ள உயர்ரக, தரமான பட்டுத் துணிகளுக்கு ‘நல்லி’ என கூறும் அளவிற்கு பலரின் தேர்விற்கும், பாராட்டிற்கும் உரிய பெருமையைத் தம் கடின உழைப்பால் தேடிக் கொடுத்தவர் நல்லி குப்புசாமி செட்டியார்.

‘நல்லி’ என்பது இவரது குடும்பப் பெயர். மார்க்கண்டேய மகரிஷி கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவரது தாத்தா, ‘நல்லி’ சின்னச்சாமி செட்டியார் பட்டுச் சேலை வியாபாரத்திற்காக காஞ்சீபுரத்திலிருந்து சென்னைக்குக் குடிபெயர்ந்தார். வழக்கமாக, காஞ்சியிலிருந்து ஜவுளி வியாபாரத்தை சென்னையில் அதுவும் குறிப்பாக மயிலாப்பூரில் உள்ள பெரிய குடும்பங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு வழங்கியவாரே செவ்வனே வியாபாரத்தைக் கவனித்து வந்தார்.

நம்பிக்கையும், நாணயமும் இருந்ததால் வியாபாரம் நன்றாக சூடுபிடிக்கத் துவங்கியதும் சென்னையிலேயே இருந்து கொண்டு வியாபாரத்தை கவனிக்க எண்ணிய சின்னச்சாமி செட்டியார், மாம்பலம் ரயில்வே ஸ்டேசனை ஒட்டியவாறு அமைந்திருந்த ஓரிடத்தை தேர்ந்தெடுத்தார். அதுதான் இன்றைய பனகல்பார்க் ‘நல்லி சில்க்ஸ்’.

1928-ல் சின்னசாமி செட்டியார் மாம்பலத்தில் துவங்கிய ‘நல்லி’ ஜவுளி வியாபாரம் இன்று நூற்றாண்டை நெருங்கிக் கொண்டு இருக்கிறது.

குப்புசாமி செட்டியாரின் தந்தையான நல்லி நாராயணசாமி செட்டியார் அவர்கள் தனது 42 வது வயதில் புகழுடம்பை எய்தியபோது குப்புசாமி செட்டியாருக்கு வயது 12 தான்.


தாயார் கண்ணம்மா, இரண்டு சகோதரிகள் ஆகியோரை ஆதரிக்கும் குடும்பப் பொறுப்பு ஒருபுறம், வியாபாரத்தையும், தொழிலாளர்களையும், வாடிக்கையாளர்களையும், நெசவாளர்களையும் கையாள வேண்டிய கட்டாயம் மறுபுறம். இதன் காரணமாக அன்றைய

எஸ்.எஸ்.எல்.சி. கல்வியை முடித்தவுடன் தொடர்ந்து கல்லூரி கல்விக்கான வாய்ப்பினை இழந்து கடை நிர்வாகத்தை தோளில் சுமந்தார்.

நல்லிகடை நிர்வாகம் இவரது கவனிப்பிற்கு உள்ளானதும் வியாபாரம் முன்பைக் காட்டிலும் பன்மடங்கானது. செட்டியாரின் நட்பு பாராட்டும் குணத்தால் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை பெருகியது. தந்தையார் விட்டுச் சென்ற பொறுப்பினை அவரது ஆசியின் துணை கொண்டு செம்மையாக்கினார். ‘எனது தயாரிப்பினை வாங்கிக் கொள்’ என்றில்லாமல் ‘உங்களுக்கு வேண்டியதை தயாரித்து தருகிறேன்’ என தொழிலில் நவீன மாற்றங்களை புகுத்தி வெற்றி கண்டார். ஜவுளி வியாபாரத்தில் இவரை வளர்த்து ஆளாக்கிய பெருமை இவரது சித்தப்பா நல்லி ரெங்கசாமி செட்டியாரையே சேரும்.

1958-ல் குப்புசாமி செட்டியாரும், சௌ.அலமேலுவிற்கும் திருமணம் நடந்தேறியது. தனது சகோதரிகள் இருவருக்கும் இனிதே திருமண வாழ்க்கையினை அமைத்துத் தந்தார். கடின உழைப்பு, நேர்மை, ஊக்கம், தளராத உறுதி, செய்யும் தொழிலே தெய்வம், தன்னடக்கம் போன்ற உயர் பண்புகளால் பனகல் பார்க்கில் 200 அடியில் செயல்பட்டு வந்த கடையினை நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் இன்று 20,000 சதுர அடிக்கும் மேலாக ஒரு தெருவில் தொடங்கும் முகப்பு மறு தெருவில் எட்டும் வகையில் மிகப் பிரமாண்டமாக உருவாக்கிக் காட்டி

‘நூற்றாண்டை நெருங்கும்’ நல்லி சில்க்ஸ்...




உள்ளார். இன்றைக்கும் நல்லி சில்க்கிற்குள் சென்றால் ஒரு வியாபார ஸ்தலத்திற்கு வந்திருக்கும் உணர்விற்கு மாறாக ஏதோ ஒரு ஆலயத்திற்கோ, பாரம்பரிய பெருமைமிக்க ஒரு இடத்திற்கோ வந்திருக்கும் உணர்வையே ஊட்டுகிறது. அவ்வளவு ரம்மியம் அங்கே வியாபித்திருக்கும்.

கல்லூரிக்குப் போக முடியாத குப்புசாமி செட்டியாரின் வீட்டில் பேராசிரியப் பெருமக்களிடம் இல்லாத அளவிற்கு ஏராளமான நூல்கள் கொண்ட லைப்ரரி உள்ளது. இவர் ஒரு புத்தகப் பிரியரும் கூட. “நல்லியிடம் பத்தாயிரம் ரூபாய் வாங்குவது எளிது. அவரது கலெக்ஷனில் உள்ள நூறு ரூபாய் மதிப்புள்ள புத்தகத்தை பெறுவது குதிரைக் கொம்பு” என அவரது நட்பு வட்டாரம் சொல்லக் கேட்டு இருக்கிறேன்.

ஓய்வில்லாத வர்த்தகப் பணிகளுக்கு இடையே கலை - இலக்கிய மேம்பாட்டுப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இவரது தொழில் பட்டு என்றாலும் மனதிற்கு மகிழ்ச்சியினையும், நிறைவையும் தருகிற பாட்டும் மிகவும் பிடிக்கும். இசையின் பரம ரஸிகர். பள்ளிப் படிப்பிற்குப் பிறகு இவர் அதிகம் படித்தும், கேட்டும் தெரிந்து கொண்டது



**செ**ன்னை, நாரதகான சபா விழா ஒன்றில் கலைஞர்களை பாராட்டிப் பேசுகையில் நல்லி செட்டியாரின் அடி மனதிலிருந்து எழும்பிய ஒரு விருப்பத்தினை இங்கே பதிவிடுகிறோம்...

“அடுத்த பிறவி என்று ஒன்று எனக்கு வாய்க்குமேயானால் நான் இசைக் கலைஞனாகப் பிறக்க வேண்டும். இசையில் நான் உன்னத நிலையினை அடைய வேண்டும். இது போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நீங்கள் தற்போது பெறுவது போல் இதுபோன்ற மகான் கையால் (ஹரிதாஸ்கிரி) பரிசு பெற வேண்டும்.

இதனை நான் வெறும் சம்பிரதாயமாகச் சொல்லவில்லை. இந்தத் தருணத்தில், இந்தச் சூழ்நிலையில், என்னுள் இருந்து என்னை இயக்கும் ஏதோ ஒரு உணர்வு இயல்பாக வெளிப்படுத்தும் வார்த்தைகள் இவை”.

சங்கீத விஷயங்களாகத்தான் இருக்க முடியும். கலா ரஸிகர் மட்டுமல்ல; கலா போஷகரும் கூட. சென்னையில் உள்ள முக்கியமான சபாக்கள் அனைத்தும் இவரின் வழிகாட்டுதல்களில் தான் இயங்கி வருகிறது. ஸ்ருதி - லயம் போல் மூன்றாவதாய் ‘நல்லி’ சங்கீதப் பரிமாணத்தின் மூன்றெழுத்து மூச்சுக் காற்றாய் விளங்குகிறது என்றால் அது மிகையில்லை.

நல்லி குப்புசாமி செட்டியார் தொழிலிலும், வாழ்க்கையிலும் தனது அனுபவங்களிலிருந்து பெற்றுக் கொண்ட பாடங்களை வரும் தலைமுறைக்கு பயன்படும் வகையில் நூல்களாக வெளிக் கொணர்ந்துள்ளார். இது தவிர, பல படைப்பாளிகளின் மதிப்புறு நூல்களை வெளிக்கொணரவும் பொருளுதவி செய்து ஊக்கப்படுத்தி இருக்கிறார். தனியொரு மனிதராய் இவர் புத்தக உலகிற்கு செய்துள்ள தொண்டு போற்றுதலுக்கு உரியது. இவரது நூல்களில் சில மராத்தி, இந்தி, தெலுங்கு, ஆங்கில மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டு உள்ளன. இரண்டு நூல்கள் தமிழக அரசின் பரிசினைப் பெற்று இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது நிர்வாகத்திறன் கண்டு பல்வேறு கலை - இலக்கிய அமைப்புகள், கல்விச் சாலைகள் - ஆன்மீகப் பேரவைகள் இவரை தலைவராக அமர்த்தி மேம்பட்டு வருகின்றன. காஞ்சி பரமாச்சாரியாரின் (பூர்வாசிரம) சகோதரர் ஞானசீலர் சிவன் அவர்களை அவரின் கடைசி காலத்தில் தன்னுடைய இல்லத்திலேயே வைத்து பராமரித்து, உபசரித்து வந்தார் என்ற செய்தி பலருக்கும் தெரியாது.

தனக்குச் சங்கீதம் தொடர்பான பால பாடப் பயிற்சி இல்லாததால் அதனை முழுமையாக ரசித்து மற்றவர்களுடன் விவாதிக்க முடியவில்லையே என்கிற குறையுணர்ந்த நல்லி செட்டியார் தன் பிள்ளைகள் பிற்காலத்தில் தன்னைப் போல் வருத்தப்படக் கூடாது என்பதற்காக தனியே குருமார்களை அமர்த்தி அவற்றில் தேர்ச்சி பெற வைத்துள்ளார்.

“நான் அடிக்கடி திருப்பதி செல்வது வழக்கம். ஒரு நாள் காலை கோவில்

பிரகாரத்தில் கோவில் வித்வான் நாதஸ்வரம் வாசிக்கக் கேட்டேன். ரஸித்தேன். அது பிரம்மோற்சவ நேரம். இரவு சாமி புறப்பாட்டின் போது நாதஸ்வர சக்ரவர்த்தி நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் வாசித்ததையும் கேட்டேன். மெய்மறந்தேன். அப்போதுதான் எனக்கு கலையில் வித்தைக்கும் - வித்வத்துக்கும் உள்ள வேறுபாடு தெரியவந்தது. சங்கீதம் குறித்த அடிப்படை ஞானம் இருந்தால் இசை எவ்வளவு ஒரு மகிழ்ச்சியான அம்சம் என்பது அதனை அனுபவிப்பவர்களுக்கு மட்டுமே புரியும். இனிப்பு என்று சொன்னால் மட்டுமே இனிக்காதல்லவா...?" என்கிறார் நல்லி செட்டியார்.



*T.N.ராஜரத்தினம் பிள்ளை (நாதசுரம்), T.V.அருணாசலம் (நாதசுரம்) - திருக்குவளை, தோளில் துண்டுடன்), மலைக்கோட்டை பஞ்சாமி (தவில்) 'கக்காயி' நடராஜசுந்தரம் (தாளம் - தோளில் துண்டுடன்), நடுவில் ஒத்து வாசிப்பவர் பெயர் தெரியவில்லை.*

**படம் உதவி: சுவாமிமலை எஸ்.சண்முகநாதன்**

தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் நன்கு அறிந்திருந்தாலும் தமிழில் பேசுவதையே அதிகம் விரும்புவார். இவரின் பன்முகத்தன்மையில் ஒவ்வொன்றை சிலாகித்து உலகளாவிய பற்பல அமைப்புகள் இவருக்கு பட்டங்கள் பலவற்றைத் தந்து பாராட்டி மகிழ்ந்துள்ளன. பள்ளிப்படிப்போடு நின்றவரின் பட்டறிவை மெச்சி அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிப் பெருமைப் படுத்தியது.

தனது கலையுலகச் சேவைக்காக தமிழக அரசின் 'கலைமாமணி' விருதினைப் பெற்று அதனை பெருமைக்குரியதாகவும் உணர்கிறார். மணிவிழா கண்ட மாமனிதருக்கு, கலைக் காவலருக்கு, கலை போஷகருக்கு மத்திய அரசு ஏற்கனவே 'பத்ம ஸ்ரீ' விருது வழங்கி மகுடம் சூட்டியது. தற்போது 'பத்மபூஷண்' விருதினை வழங்கி அந்த மகுடத்தில் மற்றுமொரு வைரக்கல்லை பதித்து இருக்கிறது.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்

செல்வர்க்கே செல்வம் தழைத்து

என்கிற வள்ளுவரின் வாக்கின்படி உதாரண புருஷராக உலா வரும் கலைப் போஷகரின் தொண்டு தொடரவும், இது போன்று இந்திய நாட்டிலிருந்து மட்டுமின்றி உலகளாவிய பல உயரிய விருதுகளைப் பெற்று இந்திய தேசத்திற்கும் - தமிழ் மண்ணிற்கும் நல்லி குப்புசாமி செட்டியார் பெருமை சேர்க்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

**- இராம. பாஸ்கர்.**

# யுகபுருஷர் கபீர்தாசர்





**பு**ண்ணிய பாரதத்தில் தோன்றிய எண்ணற்ற யுக புருஷர்களில் கபீர்தாசரும் ஒருவர். இவர் ஒரு ஞானி - சாது - சந்யாசி - தத்துவ மேதை - கவிஞர். இவை எல்லாவற்றையும் விட அவர் ஒரு சமூக சீர்திருத்தவாதி. சர்வ சமய ஒருமைப்பாடு வேண்டும் என விரும்பிய மாமனிதர்.

தொழிலால் கபீர்தாசர் ஒரு சேணியர். அதாவது நெசவாளி. எனவே, சாமான்ய பொது ஜனத் தோற்றம். பேச்சிலும் தொழில் சார்ந்த பிரிவினர் பேசும் கிராமிய கொச்சை மொழி. இருப்பினும், ஞானத்திலும், ஆன்மா - பரமாத்மா பற்றிய ரகசியங்களை வெளிப்படுத்துவதிலும் கபீர்தாசருக்கு நிகரானவர் வேறு எவரும் இருக்க முடியாது. அத்தனை தீர்க்க தரிசனம்.

இவர் வாழ்ந்த காலத்தில் இந்து - முஸ்லீம்களிடையே பரவிக் கிடந்த தீய குணங்கள் மற்றும் போலிப் பழக்க வழக்கங்களை அவர் துணிவுடன் தீவிரமாகத் தாக்கிப் பேசினார். போலி இமாம்கள் மற்றும் மௌல்விகளை மட்டுமல்லாது போலிப் பண்டிதர்கள் மற்றும் துறவிகளையும் அவர் சரிசமமாக எள்ளி நகையாடினார்.

இந்து - முஸ்லீம்களின் துர்குணங்களை எதிர்த்த அதே வேளையில், அவ்விரு சமுதாயத்தினரிடையே சுமூக உறவையும் ஒற்றுமை மற்றும் சமரசம் நிலவச் செய்ய அரும்பாடுபட்டார். ராம் - ரஹீம் பேதபாவம் நீங்கி இரு தரப்பிடமும் உடன் பிறப்பு உணர்வு ஏற்பட முற்பட்டார்.


கபீர்தாசர்

கபீர்தாசர் சேணிய வகுப்பினரிடையே வளர்ந்த போதிலும், ராமானந்தரைத் தனது குருவாக ஏற்றுக் கொண்டு அவரிடம் நல்லுபதேசங்களைக் கற்றார். இருப்பினும், ராமனையே ‘அனாகத நாதம்’ எனக் கொண்டு இரு சமயத்தினரின் பண்பாடுகளுக்கும் எல்லை வகுத்துக் கொடுத்தார்.

இதன் காரணமாகவே, அன்றைக்கு மட்டுமல்லாமல் தற்போதும் ‘கபீர் பங்க்த்திகள்’ எனப்படும் அவருடைய சீடர்கள் மற்றும் பக்தர்களிடையே இந்து - முஸ்லீம் இரு சாராரும் சம அளவில் காணப்படுகின்றனர்.

**- சேதுபதி**

# வாசகர்கள் கவனத்திற்கு

**செ**ன்னையில் பல்வேறு சபாக்களில், அரங்குகளில் நடைபெறும் இசை - நாட்டியம் தொடர்பான நிகழ்ச்சிகளை நேரில் பங்கு பெற்று ஸரிகமபதநி-க்கு அவற்றைத் தொகுத்தளிக்கக் கூடிய ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**த**மிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும், டெல்லி, மும்பை உள்ளிட்ட வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் இசை - நாட்டிய நிகழ்ச்சிகளை ஆர்வம் உள்ளவர்கள் சம்பந்தப்பட்ட படத்துடன் தொகுத்தளித்தால் ஸரிகமபதநி பிரசுரிக்க தயாராக உள்ளது.

**அ**ரசு மற்றும் தனியார் இசைக் கல்லூரிகள் - பள்ளிகள் ஆகியவற்றில் பயின்ற - பயிலும் மாணவ - மாணவியர் தத்தமது ஊர்களில் உள்ள தவில் - நாதஸ்வர - மிருதங்க - வயலின் உள்ளிட்ட வாத்யக் கலைஞர்கள், இசை - நாட்டியக் கலைஞர்களில் மூத்தவர்கள் இருப்பின் அவர்களது சுவாரஸ்யமான கலை உலக அனுபவங்களை புகைப் படத்துடன் எமக்குத் தொகுத்து அளிக்கலாம்.

**இ**சை - நாட்டியம் உள்ளிட்ட கலை உலகம் தொடர்பான நூல்களை பிரசுரம் செய்துள்ள தனி நபர்களோ, பதிப்பகங்களோ அவற்றில் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வைத்தால் அது குறித்து உரிய விற்பன்னர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்ட விமர்சனம் இடம் பெறும். மேலும் எமது இணையதளம் மூலம் உலகளாவிய கலையுலக வாசகர்களின் கவனத்திற்கும் எடுத்துச் செல்லப்படும்.

# அந்த நாள் ஞாபகம்...



முத்தண்ணா

டிசம்பர் என்றாலே கொட்டும் மழையோ, நடுக்கும் குளிரோ, பனியோ எதையும் பொருட்படுத்தாமல் எண்ணிறந்த இசைக் கலைஞர்களை நூற்றுக் கணக்கான கச்சேரிகளில் கண்டும் - கேட்டும் ரசிக்க, உள்ளூரிலிருந்து மட்டுமின்றி வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் ரசிக மகாஜனங்கள் சென்னையில் கூடிக் களித்தது ஒரு காலம்... அந்த குறுகிய காலத்திற்குள் வேணும், வேண்டாம் என இசை நிகழ்ச்சிகளை வாரி வழங்கிய சபாக்கள் இப்போது 'பழைய குருடி கதவைத் திறடி' என்பது போல் பெரிய பூட்டுக்கள் ஊஞ்சலாட ஆழ்ந்த நித்திரைக்குள் சென்றுவிட்டன.

ஒரு அரை நூற்றாண்டுக் காலம் பின்னோக்கிச் சென்று அன்றைய சபாக்கள்.. இசைக் கச்சேரிகள் எப்படி இருந்தன என்று இன்றைய இளைய தலைமுறைக்கு சொல்ல விரும்புகிறேன்.

1900-ஆம் ஆண்டு சென்னையில் சங்கீத சேவை செய்வதற்காகவே நிறுவப்பட்ட சபாதான் நூற்றாண்டு கண்ட 'ஸ்ரீ பார்த்த சாரதி ஸ்வாமி சபா' இச் சபாவினைப் பொறுத்தவரை இசை நிகழ்ச்சிகள் என்றளவில் சுருங்காமல் இயல் - இசை - நாடகம் என முப்பரிமாண ரசிகர்களையும் தன் வயப்படுத்தி வைத்திருந்தது.



அரியக்குடி ராமானுஜ ஐயங்கார்

1915-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1925-ல் பதிவு செய்யப்பட்டு 1958-ல் (துரதிர்ஷ்டவசமாக) இயங்க முடியாமல் மூடப்பட்ட சபா ஒன்று உண்டு. அது தான் எழும்பூரில், ஒரு காலத்தில் கொடி கட்டிப்பறந்த 'ஜகந்நாத பக்த சபா' இன்றைய தலை முறைக்கு எழும்பூர் என்றாலே ரயில்வே ஸ்டேசன்தான் ஞாபகத்திற்கு வரும். ஆனால், அக் காலத்தில் இசைப் பிரியர்களுக்கு 'ஜகந்நாத பக்த சபா'தான் நினைவிற்கு வரும்.

எழும்பூர் நெடுஞ்சாலையில் 'வேத விலாஸ்' கட்டிடத்தினுள் நுழைந்தாலே போதும், உளமாற - மனமாற - வாய் நிறைய புன்னகையுடன் 'அண்ணா... வாங்கோ!.... எங்கே ஸௌகர்யமோ அங்கே உட்கார்ந்துக் கோங்கோ' என்ற 'முத்தண்ணா' (ஆர்.வெங்கடாச்சாரி)-வின் குரல் நம்மை வரவேற்கும். இச்சபாவின் செயலாளர் அவர் தான். முன்வரிசை - பின் வரிசை, ரிசர்வேசன் பாகுபாடு எல்லாம் அங்கே கிடையாது.

தரையில் விரிக்கப்பட்ட அழகான ஜமுக்காளத்தில் ஹாயாக உட்கார்ந்து கொண்டு ஆனந்தமாக கச்சேரியை ரஸிக்கலாம். ஞாயிற்றுக் கிழமைகளில் இராகுகாலம் ஆரம்பிக்கும் முன்பாக சரியாக 4.25க்கு கச்சேரி துவங்கிவிடும். நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திற்கும் அதிகமாக இன்னிசை மழை பொழியும். இங்கே பாடுபவர்கள் அனைவருமே ஜாம்ப வான்களாக இருப்பர். ஒருவருக்கொருவர் சளைக்காத மேதைகள்.

இவர்களுக்கு அன்றைக்கு தரப்பட்ட

சம்பவாணை எவ்வளவு தெரியுமோ? ஸ்ரீமான் அரியக்குடி ராமானுஜ ஐயங்காருக்கு அதிகபட்சமாக ரூ.35 அல்லது ரூ.40. பிடில் ராஜமாணிக்கம் பிள்ளைவாளுக்கும்; மிருதங்கம் பாலக்காடு மணி ஐயருக்கும் ரூ.25 தொடங்கி ரூ. 30 வரை தான். அதுவும் ஐந்து மணி நேர அசகாய உழைப்பிற்கு...

ஜகந்நாத பக்த சபையில் கச்சேரி தருவதை மகா வித்வான்களே பெருமைக்குரியதாகக் கருதுவர். காரணம், எதிரே ஜமுக்காளத்தில் அமர்ந்து இருக்கும் ஒவ்வொரு ரசிகரும் குரல் வளம் இல்லாமையால் மேடை ஏறாமல் இருக்கும் வித்வாம்சம் நிரம்பியவர்கள்.

முகத்தில் அபிப்பிராயத்தை பிரதிபலிக்காத கல்லுளி மங்கன்கள், மங்கிகள் (பெண்பால்).

அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், செம்பை வைத்யநாத பாகவதர், முசிரி சுப்ரமண்ய ஐயர், ஜலதரங்கம் ரமணைய்ய செட்டியார், செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர், டி.கே.பட்டம்மாள், டி.கே.ரங்காச்சாரி, சாத்தூர் ஏ.ஜி.சுப்பிரமணியம் என முத்தான கலைஞர்கள் அடுத்தடுத்து இங்கே தங்கள் உச்சபட்ச திறமைகளை வெளிக்காட்டுவர்.


செம்பை வைத்யநாத பாகவதர்


செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர்


முசிரி சுப்ரமண்ய ஐயர்

இந்த சபாவிற்கு எழும்பூர் கார்ப்பரேசன் பள்ளியில் கச்சேரிகள் நடத்திக் கொள்ள சென்னை கார்ப்பரேசன் அன்றைக்கு அனுமதி வழங்கி இருந்தது.

இதே எழும்பூர் பகுதியில் ‘The Egmore Dramatic Society’ என்ற அமைப்பு சுந்தரராஜன் என்பவரை செயலாளராகக் கொண்டு இயங்கி வந்தது. நாடகங்களும, இசை மேதைகளின் நிகழ்ச்சிகளும் பெருவாரியாக நடைபெற்றன. நிகழ்ச்சிகள் MUSEUM தியேட்டரில் தான் நடந்தேறும்.

காலப்போக்கில் இவ்விரு சபாக்களும் மறைந்த பிறகு எழும்பூர் பகுதிக்கும் கர்நாடகச் சங்கீதத்திற்கும் இருந்த அன்யோன்யமான பந்தம் அஸ்தமித்தே போய்விட்டது. தொடர்ந்து ஸ்ஞானப் பிராப்தியே இல்லாமல் ஆகிவிட்டது.

எழும்பூரை அடுத்துள்ள நுங்கம்பாக்கத்தில் குப்புசாமி என்பவரின் தலைமையில் ‘நுங்கம்பாக்கம் ஸங்கீத சபா’ என்ற அமைப்பு சில ஆண்டுகளுக்கு நுங்கம் பாக்கம் கார்ப்பரேசன் பள்ளி வளாகத்தில் அரிய பெரிய கச்சேரிகளை நடத்தி வந்தது.

மயிலாப்பூரைப் பற்றி சொல்லவே வேண்டாம். ஸ்ரீமான் கே.வி.கிருஷ்ணசாமி ஐயர் போன்ற புரவலர்கள் ஒன்று சேர்ந்து தொடங்கிய ‘ஸங்கீத வித்வத் சபை’ (மியூசிக் அகாதெமி) மற்றும் ‘ரஸிக ரஞ்சனி சபா’வை அவ்வளவு எளிதில் மறந்து விட முடியுமா? திருமதி. அலமேலு ஜெயராமய்யர் இசைத்துறைக்கு ஆற்றியுள்ள பணியையும் நினைவு கூறத்தான் வேண்டும்.

இதே மயிலாப்பூரில் ‘மயிலை சங்கீத சபா’ என்ற பெயரில் ஒன்று இயங்கி வந்தது. நடுத்தெரு ஹைஸ்கூலிலோ, Parish ஹாலிலோ இசை நிகழ்ச்சிகளை நடத்தி மயிலைவாழ் ரசிகமணிகளை மகிழ்வித்தது.

வட சென்னையையும் சும்மா சொல்ல முடியாது. எஸ்பிளனேட் (பிராட்வே) பகுதியில் ராஜா சர் அண்ணாமலை செட்டியார், டி.கே. சிதம்பரநாத முதலியார், ஆர்.கே.சண்முகம் செட்டியார், கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்ற பிரபலங்களின் கூட்டு முயற்சியால் மகத்தான அமைப்பாக 'தமிழ் இசைச் சங்கம்' விளங்கியது.

இதைப் போல் டி.வி.கோபால் ராவ், வரதப்ப செட்டியார் ஆகியோரின் பலமான அஸ்திவாரத்தில் தொடங்கப் பெற்றது தான் 'இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி'. எம்பெருமானார் செட்டியார் அதன் போஷகராக இருக்க செவ்வனே நடைபோட்டது.

வட சென்னை 'கோகலே ஹால்' அந்நாட்களில் மிகப் பிரசித்தம். இசை மேதைகளின் குரல் இங்கே எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.


டி.கே.பட்டம்மாள்


கல்கி கிருஷ்ணமூர்த்தி

பிற சபாக்களை விட பிரமாதமான கச்சேரி களை தரவேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டு இங்கே நிகழ்ச்சிகள் அமையும். அதைப் போலவே இங்கு கிடைக்கும் YMIA டிகிரி காபியும் மிகப் பிரசித்தம்.

சென்னையில் மற்ற பகுதிகளில் உள்ள ரசிகர்களுக்கு கிடைத்த 'ரசிக வாய்ப்பு' அன்றைக்கு புதிதாக வளர்ந்த மாம்பலம் பகுதிவாழ் ரசிகர்களுக்கு இல்லை. குறிப்பாக, இப்பகுதியில் தொடக்கத்தில் அதிகளவு குடியேறியவர்கள் சங்கீதத்தில் துறைபோகிய தஞ்சாவூர்க்காரர்கள். தங்களுக்கு ஒரு சபா இல்லையே என்ற அவர்களது குறையை நடிகர் சித்தூர் வி.நாகையா போக்கினார். இவரது பெரும் முயற்சியில் தொடங்கப்பட்டதுதான் 'தியாக பிரும்ம கான சபா' அதாவது 'வாணி மஹால்' இதேபோல் திருவல்லிக்கேணியில் இந்து மேல் நிலைப் பள்ளியில் நடந்த கச்சேரிகளுக்கும் கூட்டம் அலை மோதும்.

மதறாஸ் (சென்னை) கார்ப்பரேசன் தனது பாண்டு வாத்யக் குழுவினர் மூலம் கர்நாடக இசையை மதராஸ் வாழ் மக்களிடையே பரப்பி வந்தது. (இன்றைக்கு கேட்கவே ஆச்சர்யமாக இருக்கும்) மக்கள் கூடும் பொது இடங்களிலும், பூங்காக்களிலும் சுருதி சுத்தமான தியாகராஜ கீர்த்தனைகளை இந்த பாண்டு குழுவினர் வழங்கி வந்தனர்.

இதுதவிர 1930-களில் ரிப்பன் கட்டிடத்தில் Receiving Station வைத்து Madras Presidency Radio என்று ஒரு ஒலிபரப்பு இயங்கி வந்தது. தினந்தோறும் மாலை 5 மணி முதல் இரவு 7.30 வரை சென்னை (மதறாஸ்) கார்ப்பரேசன் இந்த இசைச் சேவையை வழங்கி வந்தது. பழம்பெரும் இசை மேதைகளின் கிராமபோன் ரிகார்டுகள் இதில் ஒலிபரப்பப்பட்டன. ஆங்காங்கே ஒலி பெருக்கிகள் மூலம் இசையானது ரசிகர் களை மகிழ்வித்தது. மெரினா கடற்கரை உள்ளிட்ட பொது இடங்களில் காற்று வாங்கியபடியே மக்கள் இது போன்ற அமர கானங்களை கேட்டு ரசித்தனர்.

1938-ல் 'ஆல் இண்டியா ரேடியோ' வரும்வரை இந் நடைமுறை வழக்கில் இருந்தது.

ஆதாரம்: SVK எழுதிய The Music Legacy of Thanjavur

– ஸ்ரீரஞ்சனி

**படிக்க... பாதுகாக்க...**




## திருவெண்காடு சுப்ரமணியப் பிள்ளை (டி.பி.எஸ்)

**டி**.பி.எஸ். என்றழைக்கப்பட்ட திருவெண்காடு சுப்ரமணியப் பிள்ளை தனக்கு முன்பிருந்த நாதஸ்வர வித்வான்கள் எவரும் முயற்சிக்காத வகையில் தவில் போன்ற ராஜ வாத்தியங்களோடு வாசிக்கப்பட்டு வந்த நாதஸ்வரத்தை முதல் முறையாக வாய்ப்பாட்டு கச்சேரி போல வயலின், மிருதங்க ஓசை நயத்திற்கு ஏற்ப தனது வாசிப்பினை செம்மைப்படுத்தி, மென்மையாக்கி வெளிப்படுத்திய பேராசான். அரசு இசைக் கல்லூரிகளில் நாதஸ்வர – தவில் வகுப்புகள் துவங்க காரணமானவரும் இவரே.

**–ஸரிகமபதநி–அக்டோபர்–2024.**

– – – – – – – – – –




## பாடகர் கே.வி.நாராயணசாமி (கே.வி.என்)

**இ**ளம் பாடகர்கள் தங்கள் உழைப்பை சாரீரத்துக்கு மட்டும் தந்தா போதாது. ஞான விருத்திக்கும் தந்தாகணும். நல்ல சாரீரத்த வச்சுண்டு ஞான சூன்யமா பாடுறவாள விட கட்டை சாரீரத்தை வச்சுண்டு ஞானத்தால் கலக்குனவா அன்றைக்கும் இருந்தா... இன்றைக்கும் இருக்கா... நாளைக்கும் வருவா...

**–ஸரிகமபதநி–நவம்பர்–2024**




– – – – – – – – – –

## தீட்சிதருடைய வித்வத்வம் ஆய்விற்கு அப்பாற்பட்டது.

**ஸ்ரீ** முத்துஸ்வாமி தீட்சிதருடைய வித்வத்தை சராசரி மனிதனால் பாராட்ட இயலாது. எந்த அகராதியிலும் அதற்கான வார்த்தைகளும் கிடைக்காது. இவரது கமலாம்பா நவாவர்ணத்தில் கடைசியாக ஒன்பது ஆவரண மூல மந்திரத்தையும் உள்ளடக்கி ஒரு பாடலை அமைத்திருப்பது அதிசயத்தக்கது. இக்கிருதிகளைப் பாடினால் – கேட்டால் அத்தகையவர் வாழ்க்கை உன்னத நிலையில் இருக்கும் என்பது திண்ணம்.

**–ஸரிகமபதநி–டிசம்பர்–2024**




– – – – – – – – – –

## டி.எஸ்.பார்த்தசாரதி (டி.எஸ்.பி)

**வி**மர்சகன் என்பவன் எல்லா கலை நிகழ்வுகளையும் பார்க்க – கேட்க வேண்டும். தகுதியுள்ளவற்றை மட்டுமே விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு லாயக்கற்ற நிகழ்ச்சிகளை தேர்வு செய்து தாறுமாறாக எழுதக் கூடாது. இதன் மூலம் சம்பந்தப்பட்ட கலைஞரையும், அவரைச் சார்ந்தோரையும் வேதனைப் படுத்தாமல் இருக்கலாம்.

**– ஸரிகமபதநி – ஏப்ரல் – 2025**




# தமிழர் இசை

'**த**மிழ் இசை இயக்கம்' ஒரு புதிய இயக்கம் என்று தவறாக பலர் கருதுகின்றனர். சங்க காலத்து நூல்களில் கிடைக்கும் விவரங்களிலிருந்து அக் காலத்தில் தலை சிறந்த 'இசைமுறை' ஒன்று வழக்கத்தில் இருந்தது தெளிவாக விளங்குவதால் தமிழிசை, சங்க காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உன்னத நிலைமையை அடைந்திருக்கவேண்டும்.

சங்க இலக்கியமாகிய 'இறையனார் அகப்பொருள்-ன் உரையில் இசை நுணுக்கங்கள், சிற்றிசை, முதுநாரை, முது குருகு, பேரிசை போன்ற இசை நூல்களின் பெயர்கள் காணப்பெறுகின்றன. ஆயினும், இவற்றுள் ஒன்றேனும் தற்பொழுது வழக்கிலில்லை.

சங்க இலக்கியங்களில் வாய்ப்பாட்டைத் தவிர பலவித வாத்தியங்களும் குறிப்பிடப்பெறுகின்றன. 'இசைக்கருவிகள்' என்று பொதுப் பெயரால் அழைக்கப்படும் இக் கருவிகள் தோற்கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், மிடற்றுக் கருவிகள் என்று நான்கு வகைப்படும். துளைக் கருவிகளில் குழலும், நரம்புக் கருவிகளுள் யாழும் முக்கிய வாத்தியங்களாக இருந்தன.

பொருநராற்றுப்படை, பெரும் பானாற்றுப் படை ஆகிய நூல்களில் பலவித யாழ்களைக் குறித்த நுண்ணிய விவரங்கள் கிடைக்கின்றன. பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் ஆகிய இசை வகைகளும் குறிப்பிடப் பெறுகின்றன.

பழந்தமிழரின் வாழ்க்கை வரலாறுகளுக்கு ஒரு கருவூலம் போல திகழும் சிலப்பதிகாரத்தில் இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் ஆகிய முத்தமிழைக் குறித்த முழு விவரங்களும் கிடைக்கின்றன. இவை அப் பெருங்காப்பியத்துனூடே ஆங்காங்கே சிதறிக் கிடந்த போதிலும் அரங்கேற்றுக் காதை, கடலோடு காதை, கானல் வரி, வேனிற்காதை, ஆய்ச்சியர் குரவை ஆகிய பகுதிகளில் இசைக் குறிப்புகள் திரண்ட வடிவில் காணப் பெறுகின்றன.



இவற்றிலிருந்து பழந்தமிழர் இருபத்திரண்டு சுருதிகள் முதலான இசை நுணுக்கங்களை நன்கு அறிந்து இருந்ததுடன், கிரகபேதம் எனும் முறைப்படி ஒரு இராகத்திலிருந்து பல இராகங்கள் பிறக்கும் என்பதனை அக் காலத்திலேயே

அறிந்திருந்தனர் என்பது தெளிவாகிறது.


இவற்றை எல்லாம் நன்கு ஆராய்ந்து "சிலப்பதிகாரத்து இசை நுணுக்க விளக்கம்" என்ற நூலில் பல அரிய விஷயங்களை வெளியிட்ட பெருமை இசைப் பேரறிஞர் அமரர் டாக்டர் எஸ்.இராமநாதனைச் சேர்ந்ததாகும்.

ஆயினும், சிலப்பதிகாரத்தின் மூலத்தைப் புரிந்துகொள்ள விரும்புவோர் இக்காவியத்தின் உரைகளாகிய அரும்பதவுரை, ஆசிரியரின் உரையையும், அடியார்க்கு நல்லாரின் உரையையும் கற்றே தீரவேண்டும். இவற்றை ஆராய்ந்த பண்டிதர்களுக்கு இடையேயும் அபிப்பிராய வேற்றுமை ஏற்படுவதுண்டு.

"கருணாமிர்த சாகரம்" என்ற மாபெரும் தமிழ் இசை நூலினை இயற்றிய ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் பழந்தமிழரின் இசையில் இருபத்து நான்கு நுண்ணிய சுருதிகள் இருந்தன என்கிற கருத்தினை வெளியிட்டார். சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து 'யாழ் நூல்' எழுதிய சுவாமி விபுலா நந்தர் தமிழிசைச் சுரங்களாகிய குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகியவை ஷட்ஜத்திலிருந்து தொடங்குபவை அல்லவென்றும் மத்திமத்திலிருந்து ஆரம்பிப்பவை என்றும் அபிப்பிராயப்பட்டார்.

அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகாரத்து உரையில் ஐந்து தமிழிசை நூல்களைக் குறிப்பிடுகிறார். அவை, சிகண்டி முனிவரின் "இசை நுணுக்கம்', யாமளேந்திரரின் 'இந்திர காவியம்', அறிவனாரின் 'பஞ்ச மரபு', ஆதி வாயிலாரின் 'பாதசேனாபதீயம்', பாண்டியன் மதிவாணனாரின் "மதிவாணர் நாடகத் தமிழ்" ஆகிய இவ்வைந்து நூல்களும் தமிழ் நாட்டவரின் துரதிஷ்ட வசமாய் மறைந்து போயின.


ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்


டாக்டர் எஸ்.இராமநாதன்

சிலப்பதிகாரத்தில் வரும் இசைக் குறிப்புகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு 'இளிக்கிரமம்' என்ற முறைப்படி வகுத்தால் செம்பாலை எனப்படும் ஹரிகாம்போதியே பழந்தமிழரின் சுத்தமேளம் என்பது தெளிவாகிறது. இம் முறையை மேலும் விருத்தி செய்து கொண்டு போனால் மேற் செம்பாலை நடபைரவியாகவும், படுமலைப் பாலை கல்யாணியாகவும், செவ்வழிப் பாலை தோடியாகவும், அரும்பாலை கரகரப்பிரியாவாகவும், கோடிப்பாலை சங்கராபரணமாகவும் பரிணமிக்கும். முல்லைப் பண் தற்காலத்து மோகன ராகம் என்று ஊகிக்க இடமுண்டு.

இத்தகைய தொன்மை பொருந்திய தமிழிசை பிற்காலத்தில் வழக்கில் வந்த கர்நாடகச் சங்கீதத்துடன் இரண்டறக் கலந்து தனக்கேயுரிய தனித்தொரு நிலையினை இழந்தது.

மேலும், ஆதிகாலத்தில் பதிகங்களும், பாசுரங்களும் இசையுடன் சில குறிப்பிட்ட தாளங்களில் பாடப்பெற்று வந்தனவே தவிர தற்காலத்தில் பல்லவி, அநுபல்லவி,

சரணங்களுடன் வழங்கும் கீர்த்தனங்களைப் போன்ற இசை வடிவங்கள் அக்காலத்தில் கிடையா.

கிருதி, ஜாவளி, தில்லானா, ஸ்வரஜதி, வர்ணம் முதலிய வடிவங்களும் பிற்காலத்தில் தோன்றியவையே. ஆகவே, இந்த சாகித்ய வடிவங்கள் தோன்றும்முன் தமிழ் நாட்டின் சங்கீதக் கச்சேரிகளில் எப்பாடல்கள் பாடப் பெற்று வந்தன என்பதை நாம் ஊகத்தின் மூலம் தான் நிச்சயிக்க முடியும்.


மாயூரம் வேதநாயம் பிள்ளை


ஊத்துக்காடு வேங்கட சுப்பய்யர்

இந்துஸ்தானி சங்கீதத்தைப் பொறுத்தவரையில், முதன் முதலாக இராக, தாளங்களில் அமைக்கப் பெற்ற இசை வடிவங்கள் ஜயதேவ கவியால் இயற்றப் பெற்ற கீத கோவிந்த காவியத்தில் வரும் அஷ்டபதிகளேயாகும். தமிழ் நாட்டில் முதன் முதலாகப் பலவித தாளங்களில் அமைக்கப் பெற்ற பாடல்கள் சந்தப்பாவலப் பெருமானான அருணகிரிநாதரின் திருப்புகழ்களாகும்.

பிற்காலத்தில் சங்கீதக் கச்சேரிகளில் பல்லவி, அநுபல்லவி, சரணம் ஆகியவற்றைக் கொண்ட கிருதி அல்லது கீர்த்தனை எனப்படும் சாகித்யங்கள் முக்கிய ஸ்தானத்தைப் பெற்றதால், பல இயலிசைப் புலவர்கள் தமிழில் கீர்த்தனைகள் அமைக்க முற்பட்டனர். இவர்களுள் காலத்தால் முற்பட்டவர்கள் சீர்காழி அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர், ஊத்துக்காடு வேங்கட சுப்பய்யர், கோபாலகிருஷ்ண பாரதி, மாயூரம் வேதநாயம் பிள்ளை முதலியோர் ஆவர்.

சுமார் முக்கால் நூற்றாண்டிற்கு முன்னர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் வள்ளன்மையின் மூலம் நிறுவப்பட்ட தமிழிசை இயக்கம் பணிபுரியத் தொடங்கியவுடன் ஏராளமான தமிழ் சாகித்யங்கள் கச்சேரிகளில் பாடப் பெற்றதுடன், சுரதாளக் குறிப்புகளுடன் அவை அச்சிடப் பெற்று இசைப் பிரியர்களுக்கு வழங்கப் பெற்றன.

சென்னை, தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் தேவாரப்பண் ஆராய்ச்சி முதலியன நடத்தப் பெற்று பழந் தமிழிசையின் இலக்கணங்கள் வகுக்கப் பெற்றன. அண்ணாமலை சர்வ கலாசாலையின் இசைப்பகுதியும் இத்துறையில் உழைத்து நூற்றுக்கணக்கான சாகித்யங்களை சுர, தாள அமைப்புடன் வெளியிட்டு வந்தது.


தற்காலத்தில் தமிழிசைக்குப் பற்பல விதங்களில் தொண்டு புரிந்து வரும் இசை வல்லுநர்களுள் ஒரு சிலரை மாத்திரம் குறிப்பிடுவது முறையல்ல என்று எண்ணுகிறேன்.

தமிழிசையும், கர்நாடகச் சங்கீதமும் ஒன்றேயாதலின் மொழி வெறுப்பின்றி அதன் முன்னேற்றத்திற்காகப் புரியப்படும் எவ்விதத் தொண்டும் பயன்தரும் என்பதில் ஐயமில்லை.

**– டி.எஸ்.பி.**

**தென் தமிழகத்தின் அடையாளமான மதுரை மீனாட்சி அம்மன் கோவில் எந்தெந்த ஆண்டுகளில் தன் ஆன்மிக கலை அம்சத்தை மெருகேற்றிக் கொண்டது. மற்றும் மதுரையை ஆட்சி புரிந்த மன்னர்களது விவரம்.**

| எண் | வருடம் | கட்டப்பட்ட பகுதி | ஆட்சிபுரிந்தவர்கள் |
|---|---|---|---|
| 1 | 1168 – 1175 | சுவாமி கோபுரம் | குலசேகர பாண்டியன் |
| 2 | 1216 – 1238 | ராஜ கோபுரம் | மாறவர்மன் சுந்தரபாண்டியன் |
| 3 | 1627 – 1628 | அம்மன் சந்நிதி கோபுரம் | பராக்ரம பாண்டியன் |
| 4 | 1315 – 1347 | மேற்கு ராஜ கோபுரம் | விஸ்வநாத நாயக்கர் |
| 5 | 1372 | சுவாமி சந்நிதி கோபுரம் | கிருஷ்ணப்பா நாயக்கர் |
| 6 | 1374 | சுவாமி சந்நிதி மேற்கு கோபுரம் | வீரப்ப நாயக்கர் |
| 7 | 1452 | ஆறுகால் மண்டபம் | முத்துக் கிருஷ்ணப்பா நாயக்கர் |
| 8 | 1526 | 100 கால் மண்டபம் | முத்து நாயக்கர் |
| 9 | 1559 | தெற்கு ராஜ கோபுரம் (முக்குரிணி விநாயகர் கோபுரம்) | திருமலை நாயக்கர் |
| 10 | 1560 | சுவாமி சந்நிதி வடக்கு கோபுரம் | ரௌதிராபதி அம்மாள் மற்றும் தோளியம்மை (திருமலை நாயக்கரது மனைவிமார்கள்) |
| 11 | 1562 | தேரடி மண்டபம் | முத்து வீரப்ப நாயக்கர் |
| 12 | 1563 | பழைய ஊஞ்சல் மண்டபம் வன்னியடி நடராஜர் மண்டபம் | சொக்கநாத நாயக்கர் |
| 13 | 1564 – 1572 | வடக்கு ராஜ கோபுரம் – வெள்ளி அம்பல மண்டபம், கொலு மண்டபம் | விஜயரங்க சோமநாத நாயக்கர் |
| 14 | 1569 | சித்ர கோபுரம் ஆயிரங்கால் மண்டபம் 63 நாயன்மார்கள் மண்டபம் | மீனாட்சி அரசி |
| 15 | 1570 | அம்மன் சந்நிதி மேற்கு கோபுரம் | |
| 16 | 1611 | வீர வசந்தராயர் மண்டபம் | |
| 17 | 1613 | இருட்டு மண்டபம் | |
| 18 | 1623 | கிளிக்கூட்டு மண்டபம் புது ஊஞ்சல் மண்டபம் | |
| 19 | 1623 – 1659 | ராயர் கோபுரம் அஷ்ட ஷக்தி மண்டபம் | |
| 20 | 1626 – 1645 | புது மண்டபம் | |
| 21 | 1635 | நகரா மண்டபம் | |
| 22 | 1645 | முக்குருணி விநாயகர் | |
| 23 | 1659 | பேச்சியக்காள் மண்டபம் | |
| 24 | 1708 | மீனாஷி நாயக்கர் மண்டபம் | |
| 25 | 1975 | சேர்வைக்காரர் மண்டபம் | |



# முத்திரை பதித்த இசைப் புலவர்கள்



**ச**ங்கீதத் துறையில் பாடல்களை இயற்றிப் பாடும் இசைப் புலவர்கள் 'வாக்கேயக்காரர்கள்' அல்லது 'சாகித்தியக் கர்த்தாக்கள்' என்று அழைக்கப் பெறுகின்றனர். இவர்கள் தாங்கள் பாடும் இசைப்பாடல்களில் தமது பெயரையோ அல்லது தமது அடையாளத்தேயோ அல்லது ஒரு குறிப்பையோ சரணத்தில் வைத்து முடிக்கின்றனர்.

இதற்கு 'முத்திரை வைத்துப் பாடுதல்' என்று பெயர். தமிழில் இதனை 'அங்கிதம்' என்பர். அங்கிதம் என்பதற்கு உடல் தழும்பு அல்லது பாட்டுடைத் தலைவன் என்று பொருள். உடலில் உள்ள மாறா தழும்பானது எவ்விதம், ஒருவருடைய அங்க அடையாளமாக அமைந்து இவர்தான் அவர் என உறுதிப்படுத்துகின்றதோ அதைப் போன்று பாடலில் உள்ள அங்கிதம் அந்த பாடலை இயற்றிய இசைவாணரை குறிப்பால் உணர்த்துகின்றது.

கவியரசர் கம்பர் கூட தான் இயற்றிய கம்பராமாயணத்தில் தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலின் பெருமைகளை ஆங்காங்கே குறிப்பிட்டுச் சென்றுள்ளார். இவ்வாறு இசைப்புலவர்களும் தம்மை ஆதரித்த அரசர், வாழ்வித்த இறைவன், இசையைக் கற்பித்த குரு போன்றவர்களது பெயர்களைக் கூட தமது முத்திரையாக வைத்து இசைப் பாடல்களை இயற்றி உள்ளனர்.

தமிழ் இலக்கியத்தில் சங்ககாலத்தைச் சார்ந்த பரிபாடலில்தான் முதன் முதலாக அப்பாடலைப் பாடியோர் பெயர், பாடலுக்கு இசை வகுத்தோர் பெயர், பாடலின் பண் (இராகம்), பாடலின் தூக்கு (தாளம்) முதலியவற்றை முறையாக வைத்துப் பாடியுள்ளனர். இதனைத் தொடர்ந்து தேவாரத்தில் திருநாவுக்கரசர் நீங்கலாக மற்ற அனைவரும் தத்தமது திருப்பதிகங்களில் தமது பெயர்களை முத்திரையாக வைத்துப் பாடியுள்ளனர். தமிழில் திருநாமப்பாட்டு அல்லது திருக்கடைக்காப்பு என்னும் பகுதிகளிலும், காரைக்காலம்மையாரின் பாடல்களிலும் இது காணப்படுகின்றது. மேலும், முத்திரைக் கவி என்றழைக்கப் படும் பகுதியிலும் இது அமைந்துள்ளது.

மற்ற மொழிகளில் பாடியவர்களும் தங்கள் பெயர்களையோ அல்லது ஒரு முத்திரையையோ அடையாளமாக வைத்துப் பாடுவதை மரபாகக் கொண்டு வளர்ந்து வந்துள்ளனர். இதில் தன்னுடைய பெயரையே முத்திரையாக வைத்துப் பாடுவது 'சுவய நாம முத்திரை' எனப்படும். (தியாகராஜ - ஜெயதேவ என்று குறிப்பிடுவது) வேறு ஏதாவது ஒரு பெயரை உபயோகித்திருப்பது 'இதர நாம முத்திரை' எனப்படும் (குருகுக கோபால தாச என்று குறிப்பிடுவது) பல பெயர் களையும் உபயோகித்து முத்திரையாக வைத்துப் பாடுவது 'பார்யாய முத்திரை' எனப்படும் (சுவாதித்திருநாள் மகாராஜா 'பத்மநாப', 'பங்கஜநாப', 'சரோஜநாப' என்று வேறு வேறு பெயர்களை முத்திரையாக வைத்துப் பாடியிருப்பது)

இவ்வாறு, இசைத்துறையில் வாக்கேயக்காரர்களது பாடல்களில் காணப்படும் நாம அங்கிதங்களை - அங்கித முத்திரைகளைக் கீழ்கண்டவாறு தொகுத்து அறியலாம்.

1. காரைக்கால் அம்மையார் – 'காரைக்கால் பேய்'
2. திருஞானசம்பந்தர் – 'காழிஞான சம்பந்தர்'
3. சுந்தரமூர்த்தி நாயனார் – 'ஆரூரன்', 'ஊரன்'
4. ஜெயதேவர் – 'ஜெயதேவ கவி'
5. நாராயண தீர்த்தர் – 'நாராயண தீர்த்தர்'
6. புரந்தரதாசர் – 'புரந்தர விட்டல்'
7. தியாகராஜர் – 'தியாகராஜ'
8. சியாமா சாஸ்திரி – 'சியாமா கிருஷ்ண'
9. முத்துசாமி தீட்சிதர் – 'குரு குஹ'
10. கோபால கிருஷ்ண பாரதியார் – 'கோபால கிருஷ்ண'
11. துக்காராம் – 'துக்காராம்'
12. இராமகவி – 'இராமகவி'
13. பாபவிநாச முதலியார் – 'பாபநாச' 'பாபவிநாச'
14. விட்டல பந்த் – 'விட்டல பந்த்'
15. விஜய கோபாலர் – 'விஜய கோபால'
16. கவிகுஞ்சர பாரதி – 'கவி குஞ்சர'
17. வேங்கட விட்டலதாசர் – 'வேங்கடவிட்டல'
18. சின்னிக் கிருஷ்ணதாசர் – 'சின்னி கிருஷ்ண'
19. தச்சூர் சிங்கராச்சார்யுலு – 'சிங்கராச்சார்யுலு'
20. துமுரு நரசிம்மதாசர் – 'நரசிம்ம'
21. அச்சுததாசர் – 'அச்சுததாச'
22. லிங்கராஜ் அர்ஸ் – 'லிங்கராஜ்'
23. அருணாச்சல சாஸ்திரி – 'அருணாசல'
24. செங்கல்வராய சாஸ்திரி – 'செங்கல்வராய'
25. காமகோடி சாஸ்திரி – 'காமகோடி'
26. பல்லவி சேஷய்யர் – 'சேஷ'
27. தரங்கம்பாடி பஞ்சநாதய்யர் – 'பஞ்சநாத' 'தந்திமுக ஜனனி'
28. பைடால குருமூர்த்தி சாஸ்திரி – 'குருமூர்த்த'
29. மைசூர் சதாசிவராயர் – 'சதாசிவகவி'
30. இராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார் – 'ஸ்ரீநிவாச'
31. மைசூர் வாசுதேவாச்சாரியார் – 'வாஸுதேவ'
32. பராங்குசதாசர் – 'பராங்குச'
33. குருபூரணா நந்தர் – 'பூரணா நந்தர்'
34. இராமானுஜதாசர் – 'இராமானுஜ தாசர்'
35. ஆதிநாராயண தாசர் – 'ஆதி நாராயண'
36. வேங்கட வரததாசர் – 'வேங்கட வரதர்'
37. மாயவரம் வேதநாயகம் பிள்ளை – 'வேதநாயகன்'
38. குன்றக்குடி கிருஷ்ணய்யர் – 'கிருஷ்ண'
39. நீலகண்ட சிவன் – 'நீலகண்டன்'
40. மதுர கவிபாரதி – 'மதுரகவி'
41. காகினாடா கிருஷ்ணசாமி ஐயர் – 'கிருஷ்ண'
42. சின்னஸ்வாமி சாஸ்திரி (தாசர்) – 'சின்னஸ்வாமி'
43. கிரியப்பகாரு – 'கிரிச்'
44. மீசு கிருஷ்ணய்யர் – 'மீசு கிருஷ்ண'
45. காசிநாதர் – 'காசிநாத'
46. கபீர்நாத் – 'கபீர்'
47. பத்ராசலம் ராமதாசர் – 'ராமதாஸ', 'பத்ராசைல'
48. சதாசிவ பிரம்மேந்தரர் – 'பரம ஹம்ஸ', 'ஹம்ஸ'
49. சேத்திரக்ஞர் – 'முவ்வ கோபால'
50. முவ்வாளூர் சபாபதி ஐயர் – 'இராஜ கோபால'
51. சாரங்கபாணி – 'வேணுகோபால்'
52. மார்க்கதரசி சேஷய்யங்கார் – 'கோசல'
53. கனம் சீனய்யா – 'மன்னாரு ரங்க'
54. பல்லவி கோபாலையர் – 'வெங்கட'
55. மானம்புச்சாவடி வேங்கட சுப்பையர் – 'வேங்கடேச'
56. பட்டணம் சுப்ரமணிய ஐயர் – 'வேங்கடேச்வர'
57. குப்புஸ்வாமய்யா – 'வேங்கடேச'
58. கொத்தவால் வெங்கட்ராமையர் – 'வேங்கடேச'
59. இனுபசனி வெங்கட ராமையா – 'வேங்கடேச'
60. வீணை குப்பையர் – 'கோபாலதாச'
61. சின்னஸ்வாமி தீட்சிதர் – 'நாராயண தாச'
62. திருவெற்றியூர் தியாகையர் – 'கோபாலதாச'
63. கரிகிரிராயர் – 'நரஸிமம்'
64. சௌக்கம் வீரபத்திரையர் – 'அச்சுதபுர'
65. பல்லவி துரைசாமி ஐயர் – 'சுப்பிரமண்ய'
66. வித்யால நாராயணசாமி – 'திருப்பதி வெங்கடேச'
67. சுப்பராய சாஸ்திரி – 'குமார'
68. ஆணை பாகவதர் – 'உமாதாஸா'
69. ஐயா பாகவதர் (ஆனையய்யா சகோதரர்கள்) – 'உமாதாஸா'
70. ராமசாமி சிவன் – 'குகதாச'
71. மகாவைத்திய நாதய்யர் – 'குகதாச'
72. கோடீச்வர ஐயர் – 'கவிகுஞ்சரதாசன்'

73. அநந்தபாரதி – ‘அநந்த கவி’

74. மாம்பழக் கவிராயர் – ‘மாம்பழ’

75. அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் – ‘ஹரிகேசநிலய’

76. திருவாரூர் ராமசாமிப்பிள்ளை – ‘வேதபுரிதாசன்’

77. வீணை கிருஷ்ணமாச்சாரியார் – ‘பத்மபுரி’

78. கேசவப்பள்ளி சேது ராமைய்யா – ‘காமதேனு’

79. காஞ்சி வெங்கடாத்ரி ஸ்வாமி – ‘காமதேனு’

80. கரூர் தட்சிணாமூர்த்தி ஐயர் – ‘கர்ப்பபுரி’

81. கரூர் தேவுடு ஐயர் – ‘கர்ப்பபுரி’

82. கனம் கிருஷ்ணய்யர் – ‘வேலவா’, ‘முருக’, ‘முத்துக்குமார’

83. சுவாதித் திருநாள் மகாராஜா – ‘அப்ஜ நாப’, ‘கஞ்சநாப’, (பரியாய முத்திரை – ‘ஜலஜ நாப’, ‘கமலநாப’, ‘நளினநாப’, ‘ஸாரஸநாப’, ‘வாரிஜநாப’, ‘ஸரோஜநாப’, ‘பத்மநாப’)

84. மதுரை சீனிவாசய்யர் – ‘விஜய கோபால்’

85. பாபநாசம் சிவன் – ‘ராமதாச’

86. கீவாளூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை – ‘மீனாட்சி’

87. பெல்லாரி ராஜாராவ் – ‘திருப்பதீச’

88. சுந்தரசேகர சாஸ்திரி – ‘பாலசந்தர’

89. கவி மாத்ருபூதய்யர் – ‘திரிசிர கிரி’

90. சிவராமய்யா – ‘சிவராம’

91. ஜாவளி பட்டாபிராமய்யர் – ‘தாளவநேச’

92. ஜாவளி தர்மபுரி சுப்பராயர் – ‘தர்மபூரிச’

93. வைத்தீஸ்வரன் கோயில் பத்ம சுப்பராமய்யர் – ‘முத்துக்குமார’

94. காரைக்குடி சீனிவாச ஐயங்கார் – ‘தாசன் சீனிவாசன்’, ‘பக்தன் சீனிவாசன்’

95. ராஜம் சீதாராமையர் – ‘ராஜம்’

96. மதுசூதன பரமஹம்சர் – ‘பரமஹம்ச’

97. வேங்கட ரமண பாகவதர் – ‘வேதாந்த’

98. கல்லிடைக்குறிச்சி வேதாந்த பாகவதர் – ‘வேதாந்த’

99. இனுகொண்டவாரு – ‘இனு கொண்ட விஜயராம்’

100. ஜடபல்லிவாரு – ‘ஜடபல்லி கோபால்’

101. கனகதாசர் – ‘காகிநெல கேசவ’ ‘வேலபுரி ஆதிகேசவ’, கேசவ’

102. கார்வேட்நகர் கோவிந்தசாமய்யா – ‘கார்வேடிரங்க’

103. சேசாசல பாகவதர் – ‘ராம’

104. பரிமளரங்கன் – ‘பரிமளரங்க’

105. தஞ்சை பொன்னையா பிள்ளை – ‘குருகுகதாச’, ‘குருகுகபக்த’, ‘‘குருகுக சிஷ்ய’

106. சஹாஜி மகாராஜா – ‘சாஹராஜ’, ‘சாஹநுத’

107. நாமக்கல் நரசிம்ம ஐயங்கார் – ‘வரதவேங்கட’

108. வீணை வெங்கடசாமி ராஜா – ‘காளஹஸ்தீச’

109. துரைசாமிக் கவிராயர் – ‘துரைசாமி’

110. சுவாமி நாதக் கவிராயர் – ‘சுவாமிநாதன்’

111. வை.முத்து நடேசர் – ‘முத்து நடேச’

112. மெலட்டூர் வீரபத்ரையர் – ‘அச்யுதநுத’, அச்யுதவரத’

113. ஏகோஜி ராஜா – ‘ஏக ராஜேந்திர’

114. இராமசாமி தீட்சிதர் – ‘வெங்கட கிருஷ்ண’

115. ஸ்ரீராமகவி – ‘ஸ்ரீராம’

116. ராமச்சந்திராய தீந்தரர் – ‘ராம’

117. ருத்தரப்பட்டணம் வேங்கடராமையர் – ‘தர்மபுரி’

118. இலத்தூர் வீ.ராமகிருஷ்ண பாகவதர் – ‘கோபாலதாச’

119. கண்டராதித்தர் – ‘கோழிவேந்தன்’

120. பாலமுரளிகிருஷ்ணா – ‘முரளீ’

121. பேராசிரியர் சீனிவாசன் – ‘கலாதாச’

122. சூரபுரம் ஆனந்த தாசர் – ‘கமலேசவிட்டல்’

123. மணக்கால் வரதராஜய்யர் – ‘வரத்’

124. டைகர் வரதாச்சாரியார் – ‘வரதராஜ’

125. சூராப்தி சாஸ்திரி – ‘சிவராம்’

126. சீனிவாச அவதானி – ‘ஸ்ரீகுக’

127. மாரிமுத்தாப்பிள்ளை – ‘தில்லை’

128. ஜகந்நாத தாசர் – ‘ஜகந்நாத’

129. ஆனந்ததாசர் – ‘கமலேச விட்டல்’

130. திம்மண்ணதாசர் – ‘ரகுபதி விட்டல்’

131. ஸ்ரீவரததாசர் – ‘ஹயவதன’

132. விஜயதாசர் – ‘விஜய விட்டல்’

133. மோகனதாசர் – ‘மோகன விட்டல்’

134. கோபால தாசர் – ‘கோபால விட்டல்’

135. ஸ்ரீவிஜய தாசர் – ‘ஸ்ரீ கிருஷ்ண’

136. ஸ்ரீபாத ராஜ – ‘ரங்க விட்டல்’

137. இனுபசனி கெல வெங்கட்ராமய்யர் – ‘கோபாலகிருஷ்ண’

138. பச்சிமிரியம் ஆதியப்பையர் – ‘ஸ்ரீ வெங்கடரமண’

139. வைகுண்ட சாஸ்திரிகள் – ‘வைகுண்ட’

140. வாலாஜாபேட்டை வெங்கடரமண பாகவதர் – ‘ராமச்சந்திரபுர’

141. வேங்கடமகி – ‘கோவிந்தமகி’, ‘சுதவேங்கடமகி’, ‘வேங்கடவைத்தியநாதர்’

**– டாக்டர் கே.ஏ.பி.**

With best compliments



SMT. THANKAM KRISHNAN MEMORIAL TRUST (REGD.)

NARAYANA VISHWANATH

Chairman

'Gitalaya' AD-48, AD-Block,
1st Street, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26212454 / 26214524
E-mail : nvishwat@gmail.com

SANGEETHA SARIGAMAPADANI Regd. No. TN/CC(S) Dn/386/10-12 RNI. No. 67100/97

‘ஆங்கிகா’ பைன் ஆர்ட்ஸ் அகாடெமி சார்பில்
குருமார்களுக்கான ‘மார்கம்’ பயிற்சிப் பட்டறை சிதம்பரத்தில்
குருகுல முறைப்படி ஐந்து நாட்கள் நடைபெற்றது. இதில்
பங்களித்த உலகளாவிய பரத குருமார்கள் நடராஜர் சன்னதியில்...

